# காய்கறி வித்துக்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் செயன்முறையின் செயலாற்றல்



அறிக்கை இலக்கம் : பீஈஆர்/ஏ/2019/வித்துக்கள்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

## உள்ளடக்கம்


| இலக்கம் | விபரம் | பக்க இலக்கம் |
| --- | --- | --- |
| -------- | ----------- | ---------- |
| 01. | நிறைவேற்றுப் பொழிப்புரை | 1 |
| 02. | அறிமுகம் | 4 |
| 2.1 | பின்புலம் | 4 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகார பலம் | 10 |
| 2.3 | கணக்காய்விற்கான பிரவேசம் | 10 |
| 2.4 | கணக்காய்வின் நோக்கங்கள் மற்றும் மூலப்பிரமாணங்கள் | 11 |
| 2.5 | கணக்காய்வு நடைமுறைகள் | 12 |
| 2.6 | கணக்காய்வு விடயப் பரப்பு | 13 |
| 03. | விரிவான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள | 14 |
| 3.1 | சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அதற்குரிய பணிகளை நிறைவேற்றுதல் | 14 |
| 3.2 | விதை உற்பத்தித் தேவைப்பாட்டினைத் தீர்மானித்தல் மற்றும் புதிய விதைகளுக்கான ஆராய்ச்சி | 15 |
| 3.3 | விதை இறக்குமதி | 20 |
| 3.4 | உள்நாட்டு விதைச் சந்தையின் ஒழுங்குபடுத்தும் நடைமுறை | 22 |
| 3.5 | உள்நாட்டுக் காய்கறி விதை உற்பத்தி | 27 |
| 3.6 | விதை இருப்பினை பேணுதல் | 44 |
| 3.7 | விதைகளின் விற்பனை | 54 |
| 04. | பரிந்துரைகள் | 60 |
| | பின்னிணைப்பு | 62 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

இலங்கையினுள் விதை உற்பத்திக்கும் மற்றும் இறக்குமதிக்கும் தனியார் துறையினரின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வது 1984 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடனேயே உள்நாட்டு விதை உற்பத்தி மற்றும் இறக்குமதியில் வேகமான வளர்ச்சி ஏற்பட்டது. இதனால் விதை உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்கையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால் அந்தச் சிக்கல்களைக் குறைக்கும் நோக்கில் 2003 இன் 22ஆம் இலக்க விதைகள் அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 1997ஆம் ஆண்டின் போது ‘‘விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் தொடர்பான அரச கொள்கை’’ விதைகள் தொடர்பான கொள்கையொன்றாக கருதப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2021 சனவரி 01ஆந் வரையிலும் அது வரித்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இதற்கமைய இலங்கையில் விதைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கையினுள் செயற்படும் முதன்மையான நிறுவனமாக விவசாயத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் உள்ளதோடு அது உருவாக்கப்பட்டதன் நோக்கமானது தரமான விதைகள் நடுகைப் பொருட்களை உரிய காலத்தில் இலகுவான இடங்களில் நியாயமான விலைகளில் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகும். பூங்காவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் உள்நாட்டுப் பயிர்களுக்குத் தேவையான இனப்பெருக்க விதை உற்பத்தி செய்தல், புதிய காய்கறி வர்க்கங்கள் அறிமுகப்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்கம் ஆண்டு தோறும் பெருந்தொகையான நிதியினை உள்நாட்டு விதை துறையின் அபிவிருத்திக்காக வழங்கியிருந்த போதிலும், ஹெக்டர் கொப்பேக்கடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2018ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி அறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு காய்கறி விவசாயிகளின் சுமார் 70 சதவீதமானோர் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளை தெரிவு செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. உள்நாட்டு காய்கறி விதை வகைகள் போதுமான அளவில் விவசாயிகளுக்குக் கிடைக்காமை, அவற்றின் தரம் தொடர்பான சிக்கல்கள் காணப்படாமை போன்றே இறக்குமதி விதை வகைகளைப் பயன்படுத்துகையிலும் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்வதாக ஊடகங்கள் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தன. விதைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை நிறைவேற்றும் பொருட்டு தாபிக்கப்பட்ட தேசிய விதைச் சபையானது விதைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 14 வருடங்களுக்குப் பின்னர் அதாவது 2017 நவம்பர் 29 ஆம் திகதி முதன் முறையாகக் கூடியிருந்ததுடன் அதன் பின்னர் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் 03 சந்தர்ப்பங்களில் மட்டுமே கூடியிருந்தன. அதன் பிரகாரம், முன்னேற்றத்தினை மதிப்பிடுதல் உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய ஏனைய

கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் தேவையான தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடுகள் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறான பின்புலத்தில் பயிரிடல் நடவடிக்கைகளுக்கு விவசாயிகளுக்குத் தேவையான தரமான காய்கறி வித்துக்கள் நியாயமான விலையில் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொடுப்பதற்காக அரச நிறுவனங்களின் தலையீட்டினை மதிப்பிடும் நோக்கில் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கணக்காய்வில் விதைகள் மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் விதை உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை ஆகியவை மதிப்பிடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு தரமான விதை உற்பத்திக்கு விதை சான்றிதழ் சேவையின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் மதிப்பிடப்பட்டது.

இந்தக் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட முக்கிய அவதானிப்புகளில் காய்கறி விதைகள் தொடர்பாகப் போதியளவு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை, வருடாந்தம் தேவைப்படும் விதைகளின் அளவு தொடர்பாக சரியான எதிர்வுகூறல் இடம்பெற்றிராமை, அதற்கமைய தேவைப்பாட்டிற்கு ஏற்ற வகையில் விதை உற்பத்தி செய்யப்படாமை, விதைகளைக் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கை முறைகளில் சிக்கல்கள் காணப்படுகின்றமை, அதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் ரூபா.38 மில்லியன் பெறுமதியான காய்கறி விதைகள் முளைப்பதில் பலவீனமானதன் அடிப்படையில் அகற்றப்படுவதற்காக வைக்கப்பட்டருந்தது.

விதை விற்பனை செய்கையில் நிறுவனத்தின் மொத்த விற்பனை வலையமைப்பினுள் காணப்படுகின்ற மற்றும் விற்பனைக் களஞ்சியசாலையில் காணப்படும் இருப்பு தொடர்பான தகவல்களை மிக விரைவில் அறிந்து கொள்வதற்கு கணிணிமயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விதை விற்பனை செய்வதற்கு கமநல சேவைகள் மத்திய நிலையத்தை இணைத்துக் கொள்வதற்கு முறையான செயன்முறையொன்று இருக்கவில்லை. மிகக் குறைவான கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் மட்டுமே விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்தில் விதைக் கொள்வனவை மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறி விதைகள் போன்று ஏனைய காய்கறி விதைகள் பாரியளவில் இறக்குமதி செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 962.7 மில்லியனான காய்கறி விதை இறக்குமதிச் செலவானது அந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,491.6 மில்லியன் வரையிலும் 35 சதவீதத்தினால் அதிகரித்துக்

காணப்பட்டது. அதற்கமைய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் விவசாய அமைச்சின் வரவு செலவு மதிப்பீட்டிற்கு அமைய காய்கறி மற்றும் ஏனைய பயிர் இறக்குமதி அளவு 1/3 பங்கினால் குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விவசாயத் திணைக்களத்தினால் காய்கறி விதை இறக்குமதி எல்லை நிர்ணயம் போஞ்சி விதைக்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உண்மையில் ஒவ்வொரு காய்கறி வகைகளிலும் இறக்குமதி செய்யப்பட்ட விதை அளவுகள் தொடர்பான தரவுகள் இலங்கைச் சுங்கம் மற்றும் விவசாயத் திணைக்களம் என்பவற்றிடம் காணப்படவில்லை.

இந்தச் சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட விதைகளுடன் போட்டியிடக் கூடிய உள்நாட்டு விதைகளை அறிமுகப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்தின் மூலம் நாட்டின் தேவைப்பாட்டின் அடிப்படையில் குறைந்த பாதுகாப்பு விதை இருப்பினைப் பேணுவதற்கு விதை இருப்பு மட்டத்தினைத் தீர்மானித்து பேணிச் செல்லுதல், விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்திற்குரிய விதை உற்பத்தி 27 பண்ணைகளில் காணப்படும் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பினை அபிவிருத்தி செய்து விதை உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல், விதை பண்ணைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான பயிற்சி வளங்களை நீண்ட காலத்திற்கு பேணுதல், நீர்ப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், விதைப் பண்ணைகளில் காணப்படும் வசதிகளை விரிவுபடுத்தல், விதை விற்பனை செய்வதற்கு விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையங்களின் விற்பனைக்கூடங்களுக்கு மேலதிகமாக கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களை இணைத்துக் கொள்ளல் என்பன பரிந்துரை செய்யப்படுகின்றது.

## 2. அறிமுகம்

### 2.1 பின்புலம்

இலங்கையில் விவசாயத்திற்கு தேவையான பொருத்தமான காலநிலை புவியியல் நிலைமைகள் காரணமாகப் பாவனைக்குத் தேவையான பல்வேறு உள்நாட்டு காய்கறி வகைகள் வருடம் முழுவதும் பயிர் செய்யக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு பயிர் செய்யப்படுகின்ற காய்கறிகள் மேல்நாட்டுக் காய்கறிகள் மற்றும் தாழ்நாட்டுக் காய்கறிகள் என பெரும்பாலும் வகைப்படுத்தப்படுகின்றது. மேல்நாட்டுக் காய்கறிகளாக கோவா, கரட், லீக்ஸ், பீட்ரூட், போஞ்சி, தக்காளி, கறிமிளகாய், பூக் கோசு, நோகோல் மற்றும் உருளைக் கிழங்கு என்பனவும் தாழ்நாட்டுக் காய்கறிகளாக பறங்கிக்காய், வெள்ளரிக்காய், வெண்டிக்காய், கத்தரிக்காய், கீரை வகைகள், பயற்றங்காய் என்பன அறியப்படுகின்றன. இந்தக் காய்கறி பயிற்ச்செய்கைக்குத் தேவையான விதை உற்பத்தி தொடர்பில் கவனத்தில் கொள்ளுகையில் பெரும்பாலும் மேல் நாட்டுக் காய்கறி விதைகள் இறக்குமதி செய்யப்படுவதோடு, தாழ்நாட்டுக் காய்கறி வகைகளுக்குத் தேவையான விதைகள் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பினும், அவையும் பாரியளவில் இறக்குமதி செய்தல் இடம்பெற்றுள்ளது.

காய்கறி விதைகள் 03 கட்டங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படுவதுடன், ஆராய்ச்சி மட்டத்தில் கண்டறியப்படும் விதை வர்க்கங்கள், இனப் பெருக்க விதை (Breeder Seed) எனப்படுவதுடன், அந்த விதையினை தரப்படுத்தப்படுவதன் மூலம் பெறப்படும் விதை அடிப்படை விதை (Basic Seed) ஆகும். பாரிய அளவிலான பயிர்ச் செய்கைக்கு அடிப்படை விதையினை தரப்படுத்தலின் மூலம் பெறப்படும் விதை அங்கீகரிக்கப்பட்ட விதை (Standard Seed) எனப்படும். இந்த விதைகளுள் ஆராய்ச்சி மட்டத்தில் கண்டறியப்படும் இனப்பெருக்க விதையினை உற்பத்தி செய்யும் தனி உரிமம் விவசாயத் திணைக்களத்திற்கு உரியதாகும்.

காலணித்துவக் காலம் தொடக்கம் உள்நாட்டுப் பயிர்செய்கைக்குத் தேவையான விதை உற்பத்தி விவசாயிகளினால் பிரதேச ரீதியில் செய்து கொள்ளப்பட்டது. 1912 ஆம் ஆண்டில் பிரித்தானிய சட்டத்திற்கமைய விவசாயத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் சேவையாற்றிய தாவரவியலாளர்களினால் உணவுப் பயிர்களான முக்கிய விதை வகைகளை இனப்பெருக்கம் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்வதிலும் தலையீடு செய்துள்ளனர். 1950 ஆம் ஆண்டளவில் விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஒழுங்கான விதை துறையொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் 1980 ஆம் ஆண்டளவில் வரையிலும் இலங்கையின் பிரதான விதை விநியோகித்தல் விவசாயத் திணைக்களமே ஆகும்.

இலங்கையினுள் விதை உற்பத்தி மற்றும் இறக்குமதித் தனியார் துறையினரின் பங்களிப்பு 1984 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### 2.1.1 விதைகள் தொடர்பான தேசிய கொள்கை

விதை மற்றும் நடுகைப் பொருள் தொடர்பான தேசிய கொள்கையில் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் கூடிய போட்டி நிறைந்த சூழலில் உயர் தரத்துடனான விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் விநியோகம், விதை மற்றும் நடுகைப் பொருள் தொற்று நோய் தடைக்காப்பு மற்றும் அரச சான்றுபடுத்தல் தொடர்பில் கடுமையான சட்ட திட்டங்களை அமுல்படுத்தல். உறுதிப்படுத்தப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பான விதைத் தொகுதியினை வைத்திருப்பதன் மூலம் விதைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். சந்தைகளில் காணப்படும் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தரத்தினைப் பேணுவதற்கு சட்டதிட்டங்களை அமுல்படுத்தல், மரபணு மாற்றப்பட்ட விதை வகைகள் இறக்குமதியினை ஊக்கப்படுத்தாமை என்பன உள்ளடங்குகின்றன.

1984 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் துறையினர் விதை இறக்குமதி மற்றும் உற்பத்தியில் பிரவேசித்தனர். இதன் காரணமாக விதை உற்பத்தி மற்றும் இறக்குமதி விரைவாக அதிகரித்துச் சென்ற காரணத்தினால் ஏற்படும் சிக்கல்களைக் குறைக்கும் நோக்கில் 1997 மார்ச் மாதத்தில் விவசாயம், காணி மற்றும் வனவள அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ‘‘விதை மற்றும் நடுகைப் பொருள் தொடர்பான அரச கொள்கை’’ வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டம் வெளியிடப்பட்டுள்ளதாக விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.1.2 தொடர்புடைய நிறுவனங்கள்

காய்கறி விதை தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சு மற்றும் திணைக்களமானது விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகும். விவசாயத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் விதை சான்றிதழ் மற்றும் தாவரப் பாதுகாப்பு மத்திய நிலையம், விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையம் மற்றும் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் என்பன காய்கறி விதை தொடர்பில் நடவடிக்கை எடுக்கின்றது.

விதை சான்றிதழ் மற்றும் தாவரப் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் பிரதான கடமைப் பொறுப்பானது முடியுமான அனைத்து வகையிலும் நாட்டின் விவசாயத் துறையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு புதிய வகைப் பீடைகள் இந்நாட்டினுள் வருவதைத் தடை செய்தல், விதைகளின் தரத்தினை சான்றுப்படுத்தல் மற்றும் விதைக் கைத்தொழிலை

பிரபலப்படுத்தல் மற்றும் தொடர் பாவனைக்கு மரபணு வளத்தினைப் பாதுகாத்தல் போன்ற காரணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தலாகும்.

விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் கடமைப் பொறுப்புக்களாவன தரமான விதை மற்றும் நடுகைப் பொருள் சரியான நேர காலத்திற்கு, இலகுவான இடங்களில், நியாயமான விலைகளின் கீழ் பயிர்செய்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் என்பதுடன் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கடமைப் பொறுப்புக்களின் ஊடாக உயர் தரத்துடனான அதிக விளைச்சலைத் தரும் காய்கறிகள் மற்றும் வேர் மற்றும் ආකන්ද பயிர் இனப்பெருக்கம், பயிர் தாபித்தல், பயிர்களை நறுக்குதல், பயிற்சியளித்தல் போன்றவை உள்ளிட்ட பயிர் முகாமைத்துவம் மற்றும் நீர் நாட்டல் முறையின் கீழ் மற்றும் பாதுகாப்பு வீடுகளில் பயிரிடும் தொழில்நுட்பம், சேதன காய்கறி உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் போன்ற காரணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தலாகும்.

### 2.1.3 விதை வர்க்கங்கள்

**(அ) இனப்பெருக்க விதைகள்**

விதை தரமாக்கல் செயற்பாட்டின் ஆரம்ப விதைப் பரம்பரை இனப்பெருக்க விதை ஆகும். இனப்பெருக்கம் செய்பவரால் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வரும் அணு விதைகளினால் விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து இனப்பெருக்க விதைகளை பெற்றுக் கொள்ளுவதோடு உற்பத்தி செய்யப்படுவது உயர் தரத்தினைக் கொண்ட சிறிய விதை அளவுகளாகும். ஓவ்வொரு விதை வகை இனப்பெருக்கத்திற்கும் பொறுப்புக் கூறும் இனப்பெருக்கல்கள் தமது ஆராய்ச்சி நிறுவனத்தினால் அல்லது அதன் கீழ் காணப்படும் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் துறைகளில் தமது விசேட கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இங்கு வகைகளின் தூய்மைத் தன்மையினை நூற்றுக்கு நூறு சதவீதம் பேணப்படுவது எதிர்பார்க்கப்படும். இதற்காக தொடர்ச்சியான களப் பரீட்சிப்பு செய்வதனால் வகைகளின் இலட்சணங்களை உறுதிப்படுத்தப்பட்ட ஆரோக்கியமான, உறுதியான தாவரங்களிலிருந்து விதைகள் பெறப்படும். விதைகள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பயிரின் உகந்த வளர்ச்சிக்குத் தேவையான பின்புலத்தைத் தயாரித்துக் கொடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதனோடு விதை மூலம் பரவும் நோய், வகைகளைப் பிரிக்கும் தூரத்தினை பேணுதல் மற்றும் பயிர் நிலத்தின் வரலாறு போன்ற காரணிகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படும். உள்நாட்டுக் காய்கறி விதை தொடர்பான இனப்பெருக்க விதை உற்பத்தி

செய்தல் விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும்.

விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் அடுத்த போகத்திற்கான இனப்பெருக்க விதை தேவைப்பாட்டினை ஆராய்ச்சி மத்திய நிலையங்களுக்கு அறிவித்ததன் பின்னர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கூறிய தேவைப்பாட்டிற்கமைய அணு விதைகளைப் பயன்படுத்தி இனப்பெருக்க விதைப் பயிர்கள் களத்தில் உருவாக்குதல் மேற்கொள்ளப்படும். விதைப் பயிர் களத்தில் உருவாக்கப்பட்டதன் பின் (அமைக்கப்பட்டு 02 கிழமைகளுக்குப் பின்னர்) விதை சான்றிதழ் செய்யும் சேவையின் பிரதிப் பணிப்பாளருக்கு சான்றுதிப்படுத்த விண்ணப்பப் படிவம் அனுப்புதல் (Green card) மேற்கொள்ளப்படும். பயிரினை உருவாக்கிய பின்னர் குறைந்தது 03 தடவைகளாவது களப் பரிசோதனை இடம் பெற்றிருக்க வேண்டும்.

(I) **முதலாவது களப் பரிசோதனை**
பூ பூப்பதற்கு முன்னரான வளர்ச்சிப் பருவம் - களத்தினைப் பதிவு செய்து ஆரம்பக் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெற்றுக் கொடுத்தல்.

(II) **இரண்டாவது களப் பரிசோதனை**
பூ பூக்கும் பருவத்தில்,

(III) **மூன்றாவது களப் பரிசோதனை**
அறுவடை செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்படும்.

**(ஆ) அடிப்படை விதை**

இனப் பெருக்க விதைகளைப் பயிரிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விதைப் பரம்பரை அடிப்படை விதை என அறியப்படுவதோடு, விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குரிய அரச விதை உற்பத்திப் பண்ணைகள் மூலம் மட்டுமே அடிப்படை விதை உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்களினால் அடிப்படை விதை பெற்றுக் கொள்ளுதல் விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**(இ) அங்கீகரிக்கப்பட்ட விதை**

அடிப்படை விதைகளைப் பயிரிடுவதன் மூலம் பெறப்படும் விதைப் பரம்பரை சான்றுபடுத்தப்பட்ட விதை என அறியப்படும். விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குரிய விதை உற்பத்திப் பண்ணைகள், ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டம், தனியார் துறையின் விதை உற்பத்தி

நிறுவனம் மற்றும் தனிநபர்களினால் சான்றுபடுத்தப்பட்ட விதை உற்பத்தி செய்யப்படும்.

**2.1.4 விதை உற்பத்தி மற்றும் விதை இறக்குமதி தொடர்பான தற்கால போக்குகள்.**

(அ) உள்நாட்டு விதை வகைகள் உற்பத்தி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், விதை சான்றிதழ் சேவை, விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையம் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தினால் கீழே தரப்பட்டுள்ளவாறு நிதி செலவிடப்பட்டிருந்தது.

| **நிறுவனத்தின் பெயர்** | **2017** | | **2018** | | **2019** | |
|---|---|---|---|---|---|---|
| | **நிதி** | **செலவு** | **நிதி** | **செலவு** | **நிதி** | **செலவு** |
| | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி | ரூபா.மி |
| I. பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் | | | | | | |
| மீண்டெழும் | 35 | 23 | 52 | 43 | 32 | 26 |
| மூலதனம் | 28 | 29 | 66 | 48 | 44 | 32 |
| I. விதைச் சான்றுபடுத்தல் சேவை | | | | | | |
| மீண்டெழும் | 21 | 19 | 34 | 34 | 11 | 10 |
| மூலதனம் | 17 | 19 | 23 | 16 | 28 | 12 |
| III. விதை மற்றும் நடுகைப் பொருள் நிலையம் | | | | | | |
| மீண்டெழும் | 25 | 24 | 157 | 27 | 32 | 31 |
| மூலதனம் | 52 | 51 | 75 | 73 | 96 | 96 |

**ஆதாரம் - விவசாயத் திணைக்களம், செயலாற்றல் அறிக்கை (2017, 2018, 2019)**

இதற்கு மேலதிகமாக விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்தல் வேலைத்திட்டத்தின் கீழ் விதை கொள்வனவு செய்வதற்காக 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் ரூபா 295 மில்லியன், ரூபா 494 மில்லியன், ரூபா 355 மில்லியன், ரூபா 358 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட காய்கறி விதைகளின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட இறக்குமதிச் செலவு பின்வருமாறு ஆகும். (CIF விலை)


| வருடம் | இறக்குமதி செய்யப்பட்ட விதை அளவு | இறக்குமதிப் பெறுமதி |
|---|---|---|
| | கிலோகிராம் | ரூபா.மி. |
| 2015 | 226,152 | 963 |
| 2016 | 312,246 | 1,400 |
| 2017 | 227,255 | 1,195 |
| 2018 | 229,559 | 1,519 |
| 2019 | 198,595 | 1,491 |
| | 1,193,807 | 6,567 |

**ஆதாரம் - இலங்கைச் சுங்கம்**

மேற்கூறிய தரவுகளின்படி 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் கிலோகிராம் அளவானது 13 சதவீதத்தினால் குறைந்துள்ளதோடு, விதை இறக்குமதிச் செலவு 55 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

(இ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் அளவு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரிய செலவில் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு பின்வருமாறு ஆகும்.

| வருடம் | விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தின் விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு | இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு |
|---|---|---|
| | கிலோகிராம் | கிலோகிராம் |
| 2017 | 13,856 | 227,255 |
| 2018 | 22,189 | 229,559 |
| 2019 | 37,042 | 198,595 |




**ஆதாரம் - விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையம் மற்றும் இலங்கைச் சுங்கம்**

மேற்கூறிய தரவுகளின் பகுப்பாய்வின் போது 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் உள்நாட்டுக் காய்கறி விதைகளின் உள்நாட்டு உற்பத்தி 5 சதவீதம் தொடக்கம் 16 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதோடு அது ஒப்பீட்டளவில் அதிகரித்துச் சென்றுள்ளது. அது குறித்த நோக்காக காணப்பட்ட போதிலும் உள்நாட்டு விவசாயிகள் இறக்குமதி விதையில் தங்கியிருத்தல் 84 சதவீதம் தொடக்கம் 95 சதவீதமான வீச்சில் காணப்படுகின்றது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 3(1)ஈ 5(2), 12(ஏ) பிரிவுகளின் படி எனது தலைமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 கணக்காய்வுப் பிரவேசம்

ஆராய்ச்சி அறிக்கை மூலமும் மற்றும் பல்வேறு ஊடகங்கள் ஊடாகவும் விபரிக்கும் வகையில் தற்காலத்தில் உள்நாட்டுக் காய்கறி விவசாயம் 70 சதவீதமளவில் இறக்குமதி செய்யப்படும் கலப்பின விதைகளில் தங்கிக் காணப்படுகின்றது. அதற்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் நிதி 2018 ஆம் ஆண்டின் அடிப்படையில் ரூபா 1,519 மில்லியன் ஆகும். இதன் காரணமாக அரசாங்கம் 2015 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 6,567 மில்லியன் செலவிடப்பட்டு 1,193,807 கிலோகிராம் விதைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு பெறப்பட்ட ஒரே விதை பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பிலும் மற்றும் அவற்றின் தரம்

தொடர்பிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன. அதாவது விதை கொள்கலன்களில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளை விடவும் மிகவும் மாறுபட்ட வகையான பயிர்கள் காணப்பட்டமை, விதைகள் முளைக்காமை, எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் கிடைக்காமை, நோய்க் காரணிகள் காணப்பட்டமை என்பனவாகும். இந்தச் சிக்கல்களைக் குறைத்துக் கொண்டு விவசாயத்துறையினை மேம்படுத்தி உள்நாட்டிற்கு, நாட்டின் காலநிலைக்குப் பொருத்தமான, விசேடமாக வியாபார நோக்கில் செய்யப்படும் விவசாயத்தில் குறைந்தளவு செலவு, கூடிய விளைச்சல் இறக்குமதி விதை மூலம் ஏற்படக் கூடிய தீங்கான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு உள்நாட்டு ரீதியில் உற்பத்தியாகும் விதைகளை விரிவுபடுத்தலுக்குப் பதிலாக இறக்குமதி விதைக்கு அதிகளவில் விருப்புக் கொள்ளும் சிக்கல் காரணமாக இந்தத் தலைப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்வதற்குக் காரணமாயிற்று.

## 2.4 கணக்காய்வின் நோக்கங்கள் மற்றும் மூலப்பிரமாணங்கள்

### 2.4.1 பிரதான கணக்காய்வு நோக்கம்

உள்நாட்டு விவசாயிக்கு பயிற்செய்கைக்குத் தேவையான விதைகள் குறித்த விலையில், குறித்த நேரத்தில், குறித்த தரத்தில், இலகுவான இடங்களில் பெற்றுக் கொடுத்தல் மற்றும் உள்நாட்டு ரீதியில் தேவையான விதை உற்பத்திச் செயன்முறை தெடர்பில் பொறுப்புக்கூறும் அரச நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பிடல்.

### 2.4.2 உப கணக்காய்வு நோக்கம்

(அ) விதை உற்பத்தி நடவடிக்கைக்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாட்டினை மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் உருவாக்கப்பட்டதன் நோக்கங்களுக்கமைய செயற்படுகின்றதா என்பது தொடர்பில் அறிந்து கொள்ளுதல்.

(ஆ) உள்நாட்டு விதை உற்பத்தி மற்றும் விதை இறக்குமதி தொடர்பாக செயற்படுத்தப்படும் சட்ட ஒழுங்குகள் கற்கை மற்றும் அவற்றுக்கு நேரொத்ததாகக் குறித்த நிறுவனம் எவ்வளவு தூரத்திற்கு நடவடிக்கை எடுக்கின்றது என்பதனை மதிப்பிடல்.

(இ) இறக்குமதி விதைகளில் சார்ந்திருப்பதனால் உள்நாட்டு விவசாயத்திற்கு ஏற்படும் தாக்கத்தினை மதிப்பிடல்.

(ஈ) உள்நாட்டு விதை உற்பத்தியின் மூலம் இலங்கை விவசாயத்துறைக்கு கிடைக்கும் பங்களிப்பு போதியளவானதா என்பதனை மதிப்பிடல்.

### 2.4.3 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

(அ) விவசாயத் திணைக்களத்தின் கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டங்களின் குறிக்கோள்கள்.

(ஆ) விதை உற்பத்திக்கு மற்றும் தரக்கட்டுப்பாட்டிற்கு உரிய நிறுவனங்களின் திட்டம் மற்றும் குறிக்கோள்

(இ) தேசிய விதைக் கொள்கை

(ஈ) 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டம்

(உ) 1924 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்

(ஊ) 2003 இன் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்.

(எ) 2016 – 2018 வரையான விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்வதற்குரிய பாதீட்டு மதிப்பீட்டு நோக்கங்கள், விதை உற்பத்தி வேலைத்திட்டங்கள்.

(ஏ) விதைச் சபையிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு

(ஐ) பயிற்செய்கைக்கு பொருத்தமான விதை தொடர்பில் நடைமுறையிலுள்ள பொதுவான நியமங்கள்

(ஒ) உள்நாட்டு விதைத் தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் விதைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை

(ஓ) விதை ஆராய்ச்சி அறிக்கை மற்றும் அந்த அறிக்கைக்கு ஏற்ப விதை உற்பத்தி

(க) எதிர்பார்க்கப்பட்ட இனப்பெருக்க விதை உற்பத்தி நோக்கங்கள்

(ங) உற்பத்தியின் போது அகற்றப்படும் சராசரி விதையின் சதவீதம்

(ச) விதை களஞ்சியசாலைகளின் திறன்கள் மற்றும் தரத்தின் நிலைமைகள்

(ஞ) அதி கூடிய விதை இறக்குமதியின் எல்லை

(ட) உள்நாட்டு மற்றும் இறக்குமதி விதைகளின் விலை வேறுபாடுகள்

(ண) விதை உற்பத்தி வழிகாட்டிகள்

## 2.5 கணக்காய்வு நடைமுறைகள்

(அ) குறித்த நிறுவனங்களின் இணையத்தளம் / வருடாந்த அறிக்கை / செயன்முன்னேற்ற அறிக்கை / ஆண்டறிக்கைகள் / ஆராய்ச்சி அறிக்கை ஆகியவற்றை பரிசீலித்தல்

(ஆ) வினாக்கொத்து / மாதிரிப் படிவங்கள் மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

(இ) களப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைச் சந்தித்து நேரடிக் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

(ஈ) விதை உற்பத்திப் பண்ணைகளுக்குச் சென்று நேரடி அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

(உ) இறக்குமதி செய்யப்படும் விதைக்கான விருப்பினைப் பகுப்பாய்வு செய்தல்.

## 2.6 கணக்காய்வு விடயப் பரப்பு

இந்தச் செயலாற்றல் கணக்காய்வில் விவசாயிகளால் உள்நாட்டில் பயிரிடப்படும் 12 காய்கறி வகைகளுக்கு உள்நாட்டு உற்பத்திக் காய்கறி வகைகளுக்கு உள்நாட்டு உற்பத்திக் காய்கறி விதைகளின் மூலம் கிடைக்கும் பங்களிப்பினை மதிப்பீடு செய்கையில் அது தொடர்பாக விவசாயத் திணைக்களத்தினூடாக உள்நாட்டு விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்திக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் உரிய சேவைகளை நடாத்திச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் ஆராய்ச்சிகள், இனப்பெருக்க விதை உற்பத்தி, விதைச் சான்றிதழ் வழங்கல், விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் அடிப்படை மற்றும் சான்றுபடுத்தப்பட்ட விதை உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற காரணிகள் கவனத்திற் கொள்ளப்படும். இங்கு ஒவ்வொரு காய்கறி விதைகளில் பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த இருப்பை விதையின் தரம் தொடர்பான தர நிலைகள், விதையின் ஆயுட்காலம் தொடர்பான விஞ்ஞான ரீதியான காரணிகளைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்காததோடு உரிய நிறுவனங்களின் நடவடிக்கைச் செயற்பாடுகள், விதைச் சந்தையின் நிலைமை, உள்நாட்டு விதை உற்பத்தியினை முன்னேற்றுவதற்காக இறக்குமதி விதை மீதான விருப்புப் போக்கு தொடர்பாக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காரணிகள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

## 3. விரிவான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள்

### 3.1 சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அதற்குரிய பணிகளை நிறைவேற்றுதல்

### 3.1.1 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

2003 இன் 22 இலக்க விதைச் சட்டத்தின் II ஆவது பகுதியின் 4 ஆவது பரிவின் பிரகாரம் தேசிய விதைச் சபையொன்று உருவாக்கப்பட வேண்டியதுடன் சட்டத்தின் 06 ஆவது பிரிவின் பிரகாரம் சபையினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(அ) உயர் தரத்திலான விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் விநியோகித்தலை உறுதிப்படுத்தும் நோக்கில் வழிகாட்டல்களையும் மற்றும் கொள்கைகளையும் தயாரித்தல்.

(ஆ) விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தியின் முன்னேற்றத்தினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல்.

(இ) தரமான விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி விவசாயிகளுக்கு விதை மற்றும் நடுகைப் பொருள் விநியோகித்தல் தொடர்பான அனைத்துக் காரணிகள் தொடர்பாகவும் அமைச்சருக்கும் மற்றும் வேறு உரிய உத்தியோகத்தர்களுக்கும் அறிவுரை வழங்குதல்.

(ஈ) விதை மற்றும் நடுகைப் பொருள் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதற்கு விதை மற்றும் நடுகைப் பொருளின் தரக் கட்டுப்பாட்டினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல்.

(உ) சந்தைகளில், காணப்படும் விதை மற்றும் நடுகைப் பொருட்களில் இருக்க வேண்டிய முளைக்கும் தன்மை, உயிர்ப்புத் தன்மை, மரபணுத் தூய்மை, பௌதிகத் தூய்மைத் தன்மை விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தோற்றம் என்பவற்றின் பொருத்தம் குறைந்த மட்டத்திலா மற்றும் மரபணுத் தூய்மைத் தன்மை, சேதமடைந்த விதை, விதைகளின் ஈரலிப்பு அளவு மற்றும் பீடைகளுக்கு (புற்தாவர விதை உள்ளிட்ட) வரையறைகளை ஏற்படுத்தல்.

(ஊ) சந்தையில் உள்ள விதை கொள்கலன்கள் மற்றும் பொருட்களுக்கு லேபிள் இடுதலின் குறைந்தபட்ச தேவைப்பாட்டினை சட்டமாக்குதல்.

(எ) சந்தையில் காணப்படும் ஒவ்வொரு விதை இனத்திற்கு, ரகத்திற்கு அல்லது வகைகளுக்கு உரித்தான விதை கொள்கலன்களின் நிலை மற்றும் ஆகக் குறைந்த அளவினைத் தீர்மானித்தல் மற்றும் புதிய தாவர வகைகள் மற்றும் தாவர இனப்பெருக்கத்தின் உரிமத்தினைப் பாதுகாத்தல் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

விதைச் சபையினால் உள்நாட்டு விதை உற்பத்தியின் முன்னேற்றத்தினை மதிப்பிடல் உள்ளிட்ட விதைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள இந்த ஏனைய செயல்களையும் நிறைவேற்றுவதற்குத் தீவிர பங்களிப்பு செய்யாததனால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி அடுத்த பந்திகளில் விபரிக்கப்படும்.

### 3.1.2 தேசிய விதைச் சபையின் செயற்பாடுகள்

இந்தச் செயல்களை நிறைவேற்றுவதற்காக சட்ட ரீதியிலான தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தல் மற்றும் அதற்குரிய செயல்களை நிறைவேற்றுவதற்காக 2003 இன் 22 ஆம் இலக்க விதைச்சட்டத்தின் 04 ஆவது பிரிவிற்கமைய நிறுவப்பட்ட தேசிய விதைச் சபையானது 2017 நவம்பர் 29 ஆம் திகதி முதல் தடவையாகக் கூடியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 03 தடவைகள் கூட்டப்பட்டிருந்தது. இந்த தேசிய விதைச் சபையானது தேவையின் அடிப்படையில் அல்லது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய கூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய விதைச் சபை முதல் தடவையாகக் கூடியிருந்தது, தேசிய விதைச் சட்டம் அமுலாக்கப்பட்டு 14 வருடங்களுக்குப் பின்னரே என்பதுடன், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 03 தடவைகள் மட்டுமே கூடியிருந்தது என்பதனால் உள்நாட்டு விதை உற்பத்தியின் முன்னேற்றத்தினை மதிப்பிடல் உள்ளிட்ட உரிய ஏனைய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் தேவையான முடிவுகளை எடுக்கும் பணிகளை செயற்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே விதைகள் அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (அ) பிரகாரம், உயர் தரத்திலான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தலை சான்றுபடுத்துவதற்காக வழிகாட்டிகள் மற்றும் கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், விதைகள் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 சனவரி 01ஆந் திகதி வரையிலும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 விதை உற்பத்தித் தேவைப்பாட்டினைத் தீர்மானித்தல் மற்றும் புதிய விதைகளுக்கான ஆராய்ச்சி

### 3.2.1 விதை தேவைப்பட்டினைத் தீர்மானித்தல்

(அ) இலங்கையில் வருடாந்தம் நுகர்வுக்குத் தேவையான காய்கறிகளின் அளவு எவ்வளவு என்பதைக் கணக்கிடுதல் இடம்பெற்றிருக்காததுடன், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் வீட்டுக்குரிய வருமான செலவு ஆய்வு அறிக்கையின் தனிநபரின் சாதாரண காய்கறி நுகர்வு அளவு கணக்கிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்படும் காய்கறி அளவு அதனுள் இணைக்கப்பட்டிருக்காததால் காய்கறி

நுகர்வு தொடர்பான மொத்த தேவைப்பாட்டினைக் கணக்கிடல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) விவசாயத் திணைக்களத்தின் பயிர் முன்னறிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு காய்கறி வகைகளில் மாதாந்தத் தேவையினை அறிந்து பயிர்டுவதற்காக விலை தொடர்பான சமிக்ஞையினைப் பெற்றுக் கொள்ளுதல் இடம்பெற்றிருந்த போதிலும், விதைத் தேவைப்பாடு தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்தினால் உள்நாட்டு ரீதியில் விதை உற்பத்தி நடவடிக்கைக்குத் தேவைப்படும் அடிப்படை விதை மற்றும் சான்றுபடுத்தப்பட்ட விதை உற்பத்தி செய்யப்படுவதுடன், அது விதை உற்பத்தி வேலைத்திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டதாயினும் அது மொத்த காய்கறி விதைத் தேவைப்பாட்டின் எந்தளவினைப் பிரதிநிதிப்படுத்துகின்றது என்பது குறிப்பிடப்படவில்லை. அவ்வாறெனினும் விவசாயத் திணைக்களத்தின் தகவல்களுக்கமைய 11 வகைக்குரிய காய்கறி விதைகளின் இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்குகையில் போஞ்சி விதைக்கு மட்டும் அதிகூடிய இறக்குமதி எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய விதைகள் சந்தையின் செயற்பாட்டிற்கமைய இறக்குமதி செய்யக்கூடிய சாத்தியப்பாடு கிடைத்துள்ளது.

(ஈ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக விவசாயிகளுடன் செயற்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட கிட்டிய அரச உத்தியோகத்தரான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் உதவியினைப் பெற்றுக் கொண்டு விவசாயிகளின் காய்கறி விதைத் தேவைப்பாடு தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளல் அல்லது அவர்களுடன் சிறந்த தொடர்பினைப் பேணிக்கொண்டு காய்கறி விதைத் தேவைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அரசின் விவசாய மற்றும் நடப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தைச் செயற்படுத்துகையில் வேறு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிறுவன ரீதியான, சட்ட, உதவி மற்றும் முகாமைத்துவ சேவைகளை ஏற்பாடு செய்தல் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கடமையாக உள்ளதுடன் விதை தேவைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கு அந்தத் திணைக்களத்தினூடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.2 உள்நாட்டு காய்கறி விதை தொடர்பான ஆராய்ச்சிகள்

#### (அ) பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள்

காய்கறி விதை தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் ஆகும். இந்த நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் புதிய இனக்கலப்பு மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை வகை அபிவிருத்தி மற்றும் அடிப்படை விதை உற்பத்தி செயற்றிட்டத்தின் மூலம் 08 காய்கறி வகைகளுக்குரிய 20 வர்க்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இந்த செயற்றிட்டத்திற்காக மொத்தமாக ரூபா 56.7 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது. அதற்கமைய மேற்கூறிய செயற்றிட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 08 காய்கறி வகைகளில் 12 வர்க்கங்கள் உள்ளிட்ட 17 வர்க்கங்கள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வர்க்கங்கள் உயர் தரத்திற்கும், உயர் விளைச்சலுக்கும் மேலதிகமாக பீடைகளை எதிர்க்கும் சக்தியைக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தக்காளி, போஞ்சி, பூசணிக்காய், கறிமிளகாய், பாகற்காய், பயற்றங்காய், வெள்ளரிக்காய், கீரை, பீர்க்கங்காய், கத்திரிக்காய், வெண்டிக்காய், கரட் ஆகிய 12 காய்கறி வகைகளுக்குரிய விபரங்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

I. பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டில் கரட் (Lanka Carrot) வர்க்கத்தினை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதனை சந்தையில் காணப்படும் இலட்சணமான செம்மஞ்சள் வர்ணம் காணப்படாமை, ஒரு வருட வர்க்கமாக இருத்தல், விளைச்சலை அறுவடை செய்தல் தாமதிக்கையில் பூ பூத்தல் இடம்பெறுதல் மற்றும் கிழங்கின் மத்தியில் பச்சை நிறமாகும் காரணத்தால் நுகர்வோர் கேள்வி குறைந்த அளவில் காணப்படுகின்றமை விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டிருந்தது. இதன் காரணமாக தொடர்ச்சியாக இறக்குமதி கரட் விதையினைச் சார்ந்திருக்கும் நிலை உள்நாட்டு கரட் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

II. 2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கறிமிளகாய் ‘‘பிரார்தனா’’ எனும் பெயருடைய வர்க்கத்தினுள் வர்க்க ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றமையால் மீளவும் வர்க்க ரீதியிலான இலட்சணங்களைத்

தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளின் பின்னர் விவசாய உற்பத்தியில் இணைத்துக் கொள்ளப் பொருத்தமானது என விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டிருந்தது.

III. 2012 ஆம் ஆண்டில் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பண்டாரவளை கிறீன் எனும் போஞ்சி வர்க்கம் 1,329.7 கிலோகிராம் முளைத்தல் குறைபாடு காரணமாக 2018 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 2 மில்லியன் ஆகும். இந்த வர்க்கத்திற்குக் காணப்படும் கேள்வியுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி உயர் மட்டத்தில் காணப்படுவதனால் இந்த வர்க்கத்தினை உற்பத்தி செய்கையில் கேள்வி தொடர்பில் கவனத்திற் கொள்ளுவது போன்று விவசாயிகளிடையே பிரசித்தமடையாமைக்கும் காரணம் காணப்படுகின்றதா என்பது தொடர்பாகவும் கவனத்திற் கொண்டு அதற்கமைய உற்பத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் பொருத்தமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் 2016 ஆம் ஆண்டில் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் விண்ணப்பித்த 04 காய்கறி வகைகளின் 09 வர்க்கங்களின் இனப்பெருக்க விதைகள் விண்ணப்பத் தொகையில் 55 சதவீதத்தினை விநியோகிப்பதற்கு அந்த நிறுவனம் தவறியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **காய்கறி வகை** | **ரகம்** | **கோரப்பட்ட அளவு** | **விநியோகிக்கப்பட்ட அளவு** | **பற்றாக்குறை** |
|---|---|---|---|---|
| | | **கிலோகிராம்** | **கிலோகிராம்** | **கிலோகிராம்** |
| போஞ்சி | கண்ணோருவை பில் | 75 | 37.7 | (37.3) |
| | பண்டாரவளை கிறீன் | 50 | 27.2 | (22.8) |
| | சஞ்சய | 50 | 21.5 | (28.5) |
| | Top Crop | 100 | 42 | (58) |
| | இலங்கை பட்டர் | 50 | 19.5 | (30.5) |
| வெள்ளரிக்காய் | கல்பிட்டி | 02 | 1.9 | (0.1) |
| சிறகவரை | SLS - 44 | 20 | 8.2 | (11.8) |
| | கிரிஷ்ணா | 20 | 6.2 | (13.8) |
| கரட் | இலங்கை கரட் | 2 | 0.225 | (1.775) |
| **மொத்தம்** | | **369** | **164.425** | **204.575** |

**ஆதாரம் - பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம்**

(இ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குத் தேவையான விதைகளின் அளவு எவ்வளவு என்பது தொடர்பில் திட்டவட்டமாக குறிப்பிடப்படாது காய்கறி விதை வர்க்கங்களை மட்டும் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் மத்திய நிலையத்திடமிருந்து கோரப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இனப்பெருக்க விதை விநியோகம் முறையே 80 சதவீதம் மற்றும் 82 சதவீதம் எனும் அளவுகளில் குறைந்திருந்தது.

(ஈ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் விற்பனைக் கூடங்கள் ஊடாக பயிர்ச் செய்கைக்காக விற்பனை செய்யப்பட்ட சிறகவரை – (கிருஷ்ணா) மற்றும் தக்காளி – (திலினி) ஆகிய வர்க்கங்களில் வர்க்க ரீதியான இலட்சணங்கள் வேறுபட்டதன் அடிப்படையில் செய்தல் 2018 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் ''திலினி'' எனும் வர்க்கத்தில், வர்க்கத் தூய்மையினை ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் மீளவும் பரிட்சித்து வழங்கப்பட்டதெனவும், வர்க்க ரீதியான சிக்கல் நிறைந்த சிறகவரை (கிருஷ்ணா) மற்றும் தக்காளி – (திலினி) வர்க்கங்களில் காணப்பட்ட விதை இருப்பினை விவசாயிகளுக்கு அறிவித்து அவர்களின் இணக்கப்பாட்டுடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும் விவசாயத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

**(உ) ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்**

காய்கறி விதை உற்பத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளுகையில் ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் 2013 ஆம் ஆண்டில் ''ஒப்பந்த விதை உற்பத்தி தொடர்பில்'' மற்றும் 2018 ஆம் ஆண்டில் ''இலங்கையில் விதை தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் கலப்பின விதை உற்பத்தி மற்றும் காய்கறி பயிற்செய்கை தொடர்பில்'' எனும் இரண்டு ஆராய்ச்சிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சியை ஊட்டமளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தல், அவற்றுக்கு ஆதரவளித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் இந்நிறுவனத்தின் கடமைகளில் இணைக்கப்பட்டுள்ளதால் விதைத் தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் காய்கறி விதை உற்பத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 விதை இறக்குமதி

### 3.3.1 விதை இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்

1924 இன் தாவர பாதுகாப்புச் சட்டத்தின் 447 ஆவது பந்தியினை திருத்தி 1981 நவம்பர் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட 165/2 ஆம் இலக்க வர்த்தமானியில் 01 ஆம் இலக்கத்தின்படி விதை இறக்குமதி செய்கையில் அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் உள்ளதுடன் அதற்கமைய 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 11 காய்கறி வகைகளுக்கான இறக்குமதி அனுமதிப் பத்திரம் மூலம் இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்ட விதை அளவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| காய்கறி வகை | 2017 | | | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டு ள்ளதா | உச்ச இறக்குமதி எல்லை (மெட்ரிக் டொன்) | அனுமதிப் பத்திரம் மூலம் அனுமதி க்கப்பட்ட தொகை (மெட்ரிக் டொன்) | அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டு ள்ளதா | உச்ச இறக்குமதி எல்லை (மெட்ரிக் டொன்) | அனுமதிப் பத்திரம் மூலம் அனுமதி க்கப்பட்ட தொகை (மெட்ரிக் டொன்) | அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டு ள்ளதா | உச்ச இறக்குமதி எல்லை (மெட்ரிக் டொன்) | அனுமதிப் பத்திரம் மூலம் அனுமதி க்கப்பட்ட தொகை (மெட்ரிக் டொன்) |
| புடலங்பாய் | ஆம் | - | 0.475 | ஆம் | - | 0.35 | ஆம் | - | 0.4 |
| பறங்கிக்காய் | ஆம் | - | 92.0115 | ஆம் | - | 62.305 | ஆம் | - | 96.644 |
| போஞ்சி | ஆம் | 187.10 | 187.100 | ஆம் | 108.6 | 108.6 | ஆம் | 163.000 | 163 |
| வெள்ளரிக்காய் | ஆம் | - | 37.423 | ஆம் | - | 30.7533 | ஆம் | - | 39.172 |
| பாகற்காய் | ஆம் | - | 42.669 | ஆம் | - | 38.7555 | ஆம் | - | 44.06 |
| தக்காளி | ஆம் | - | 20.1805 | ஆம் | - | 15.5315 | ஆம் | - | 20.463 |
| கறிமிளகாய் | ஆம் | - | 35.592 | ஆம் | - | 27.63 | ஆம் | - | 32.18 |
| சிறகவரை | இல்லை | - | - | இல்லை | - | - | இல்லை | - | - |
| பயிற்றங்காய் | ஆம் | - | 18.06 | ஆம் | - | 31.16 | ஆம் | - | 30.2925 |
| வெண்டிக்காய் | ஆம் | - | 30.049 | ஆம் | - | 43.7105 | ஆம் | - | 32.727 |
| மிளகாய் | ஆம் | - | 0.28 | ஆம் | - | 0.2451 | ஆம் | - | 0.416 |
| | | **187.10** | **463.84** | | **108.6** | **359.04** | | **163.000** | **459.35** |

**ஆதாரம் - விவசாயத் திணைக்களம்**

மேற்கூறிய தகவல்களுக்கமைய பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்தத் தகவல்களுக்கமைய போஞ்சி விதை இறக்குமதிக்கு மட்டும் அதி கூடிய எல்லை நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன் அதற்கமைய முறையே 2017 தொடக்கம் 2019 வரையில் 187.1 மெட்ரிக் டொன், 108.6 மெட்ரிக் டொன் மற்றும் 163 மெட்ரிக் டொன் என இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சுங்கத்திடம் உள்ள தரவுகளின்படி இறக்குமதி செய்யப்பட்ட மொத்த காய்கறி விதை அளவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும் ஒவ்வொரு காய்கறி வகைகளிலும் இறக்குமதி செய்த விதைகளின் அளவு தொடர்பாக வேறு வேறாக தரவுகள் காணப்படவில்லை. அதற்கமைய 2017, 2018 மற்றும் 2019 வரையான மூன்று ஆண்டுகளில்

மேற்கூறிய 11 காய்கறி வகைகளுக்குரியதாக முறையே 464 மெட்ரிக் டொன், 359 மெட்ரிக் டொன் மற்றும் 459 மெட்ரிக் டொன் இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு காய்கறி வகையிலும் எவ்வளவு உண்மையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது என்பதனைக் கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதிருந்தது. அதற்கமைய இவ்வாறான தரவுகள் இல்லாத காரணத்தால் விதை ஒழுங்குறும் செயலை திருப்பதிகரமான முறையில் மேற்கொள்ளுவதற்குப் தடையாக அமைந்தது.

### 3.3.2 காய்கறி விதைகள் இறக்குமதி

விவசாயத் திணைக்களத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வருடாந்த வரைவு செலவு மதிப்பீடுகளில் விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்தல் தேசிய வேலைத்திட்டத்திற்கமைய காய்கறி மற்றும் ஏனைய பயிர் இறக்குமதி அளவினை 1/3 பங்கினால் குறைத்துக் கொள்வதற்கான இலக்கினை கொண்டிருந்த போதிலும், அதற்கு உரியதான காய்கறி விதை இறக்குமதி குறைந்திருக்காமை இலங்கை சுங்கத்திடம் பெற்றுக் கொண்ட தரவுகளின்படி அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் கிலோகிராம் அளவானது 13 சதவிதத்தினால் குறைந்திருந்தது. எனினும் விதை இறக்குமதி செலவு 55 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை கீழுள்ள தரவுகளுக்கமைய அவதானிக்க முடிகிறது. இதற்கமைய இறக்குமதிக் காய்கறி விதை அளவு 2015 தொடக்கம் 2019 வரையான 05 வருட காலப் பகுதியினுள் காய்கறி விதை ஒரு கிலோகிராமிற்கான சாதாரண இறக்குமதி செலவு 76 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

| **வருடம்** | **இறக்குமதி செய்யப்பட்ட அளவு** | **பெறுமதி** | **ஒரு கிலோகிராம் விதையின் சாதாரண இறக்குமதிச் செலவு** |
|---|---|---|---|
| | கி.கிராம் | ரூபா.மி | ரூபா |
| 2015 | 226,152 | 963 | 4,258 |
| 2016 | 312,246 | 1,400 | 4.483 |
| 2017 | 227,255 | 1,195 | 5,258 |
| 2018 | 229,559 | 1,519 | 6,617 |
| 2019 | 198,595 | 1,491 | 7,507 |
| | 1,193,807 | 6,568 | |

**ஆதாரம் - இலங்கைச் சுங்கம்**

### 3.4 உள்நாட்டு விதைச் சந்தையின் ஒழுங்குபடுத்தும் நடைமுறை

### 3.4.1 விதை நுகர்வு தேவை திருப்பதிகரமாயிருத்தல்

2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10(i) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில் பொருட்கள் அனைத்தும் லேபலிடல், விலை காட்சிப்படுத்தல், கொள்கலனிடல், விற்பனை செய்தல் அல்லது தயாரித்தல் தொடர்பில் பொது விதிகள் வழங்கப்பட்ட முடியும். மேலும் அந்தப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய நேரம் மற்றும் அவ்வாறு விற்பனை செய்யக் கூடிய இடம் மற்றும் பொருட்கள் எதுவும் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் சேகரித்தல் தொடர்பான வேறு ஏதேனும் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ள விசேட விதிகள் ஏதேனும் வகுப்பிற்குரிய தயாரிப்பினர் மற்றும் விற்பனையாளருக்கு வழங்கப்பட முடியும். இந்த அதிகாரத்தின் பிரகாரம் விவசாயிகளால் விதை வகைகளைக் கொள்வனவு செய்கையில் பாவனையாளர் சேவைகள் அதிகாரசபை தலையிடும் முறை தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் காரணிகள் வெளியிட்டன.

(அ) 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் விதை இறக்குமதி, விநியோகித்தல், விலையிடல், விற்பனை செய்தல் மற்றும் லேபிலிடல் தொடர்பான விசேட ஒழுங்கு விதிகளை வழங்கியிருக்காததுடன் இதற்கான காரணிகள் தொடர்பான அதிகாரத்தை வழங்கியுள்ள 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவிற்கமைய இந்தக் காரணிகள் தொடர்பான கட்டளைகளைத் தயாரித்துச் செயற்படுத்துவது கணக்காய்வு திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டத்தின் 6(உ) இற்கமைய தேசிய விதைச்சபையின் கடமையாக சந்தையில் காணப்படும் விதை மற்றும் நடுகைப் பொருட்களில் இருக்க வேண்டிய தரம், பௌதிக தூய்மைத் தன்மை, தோற்றம், சேதமடைந்த விதை, பீடை என்பவற்றுக்கு எல்லைகளை உருவாக்க வேண்டியமை குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளில் பலரிடமிருந்து சந்தைகளில் கொள்வனவு செய்யப்பட்ட விதைகள் தொடர்பில் முறைப்பாடு நுகர்வோர் சேவை அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரசபையினால் விதைச் சட்டத்தின் 14(2) இற்கமைய விதை தொடர்பான அறிக்கையொன்று விவசாயத் திணைக்களத்தின் விதைச் சான்றிதழ் வழங்கும் ஆய்வுகூடத்திலிருந்து பெற்றுக் கொண்டு குறித்த நட்டமாக ஹெக்டயருக்கு / ஏக்கருக்கு ரூபா 140,792 என மதிப்பிட்டு விவசாயிகளுக்கு உரிய தொகையினை வழங்குமாறு பிரதிவாதி

நிறுவனத்திற்கு தெரிவித்திருந்தது. குறித்த முறைப்பாட்டினை மேற்கொண்ட தினம் தொடக்கம் 2020 ஜூன் 25 ஆம் திகதி வரையிலும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்து விட்ட போதிலும் குறித்த நட்டஈட்டினை விவசாயிகளுக்கு அறவிட்டுக் கொடுப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு இயலாது போயுள்ளது.

(இ) மலைநாட்டு காய்கறி விதைகள் இலங்கையில் உற்பத்தி செய்ய முடியாத காரணத்தால் அவை இறக்குமதி செய்யப்படுகின்ற போதிலும், தாழ்நாட்டு காய்கறி விதைகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட முடியும். ஆயினும் அந்த விதைகளில் பல இறக்குமதி செய்யப்படுவதுடன் அவற்றின் விலைகள் உள்நாட்டு விதைகளை விட பல மடங்கு அதிகம் என ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் 2018 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட "Hybrid Seeds and Vegetable Cultivation in Sri Lanka Local Vs Imported" ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2015 ஆம் ஆண்டில் தம்புள்ளையில் காணப்பட்ட தாழ்நில காய்கறி விதைகளின் வருடாந்த சில்லறை விலை பின்வருமாறு ஆகும்.

தாழ்நாட்டு காய்கறி விதைகளில் வருடாந்த சில்லறை விலை (2015 - தம்புள்ளை)

| **பயிர்** | **இறக்குமதி செய்யப்படும் வகை** | | | **உள்நாட்டு வகை** | | |
|---|---|---|---|---|---|---|
| | **வகை/பெயர்** | **தொகை** கிராம் | **விலை** ரூபா | **வகை/பெயர்** | **தொகை** கிராம் | **விலை** ரூபா |
| தக்காளி | பத்மா(F1) | 10 | 1550 | மகேஷி (F1) | 10 | 900 |
| | க்ளோரி (OP) | 10 | 1600 | | | |
| பீர்க்கங்காய் | நாகா(F1) | 100 | 1576 | LA33 (OP) | 100 | 560 |
| பாகற்காய் | பாளி(F1) | 100 | 2920 | MC43 (OP) | 100 | 410 |
| | | | | மாத்தளை கிறீன் (OP) | 100 | 465 |
| | | | | தின்னைவேலி(OP) | 100 | 640 |
| பூசணிக்காய் | அபிஷேக்(FI) | 100 | 2300 | ருஹுணு(OP) | 100 | 475 |

இதற்கமைய உள்நாட்டு காய்கறி விதைகளை விட இறக்குமதி காய்கறி விதையின் விலை அதிகம் என்பது அவதானிக்கப்பட்டது. விவசாயிகள் இவ்வாறு அதிக விலையினைச் செலுத்தி இறக்குமதி விதைகளைக் கொள்வனவு செய்வதற்கான காரணமாக அமைந்துள்ளது. உள்நாட்டுச் சந்தையில்

நுகர்வோர் தேவையினைப் பூரணப்படுத்தக் கூடியளவு உள்நாட்டு விதை விநியோகம் இல்லாமை ஆகும்.

(ஈ) பயிற்செய்கை நடவடிக்கைக்காக கொள்வனவு செய்யப்பட்ட விதை தரமானதாக இல்லாமை, கூடிய விலைக்கு விற்பனை செய்தல் தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபைக்கு 2017 தொடக்கம் 2019 வரையான 03 வருடத்தினுள் 02 சந்தர்ப்பங்களில் 05 விவசாயிகள் விதை முளைத்தல் மற்றும் விளைச்சலின்மை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த முறைப்பாட்டாளர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுத்தல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கை தொடர்பான இறுதி தீர்மானத்தினை எட்டியிருக்கவில்லை.

(உ) 2018 ஏப்பிரல் 03 ஆம் திகதி நுவரெலியா பிரதேச செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் பயிர்விதைகளின் விலை அனைத்து போகங்களிலும் அதிகரித்தல் மற்றும் விற்பனை நிலையங்களில் ஒரே விதை பல்வேறு விலைகளில் விற்பனை செய்தல் மற்றும் தரம் குறைதல் தொடர்பில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபைக்கும் மற்றும் சீதாஎலிய சான்றிதழ் சேவைக் காரியாலயத்திற்கும் முறைப்பாடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 சந்தையிலுள்ள விதைகளின் தரம்

விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை மூலம் விதைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல் முக்கிய இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது விதைச்சான்றிதழ் சேவையை வழங்குதல் மற்றும் விதைச்சட்டத்தினை நடைமுறைப்படத்தல் என்பனவாகும். விவசாயத் திணைக்களத்தின் உற்பத்தியினை அனைத்து இனப்பெருக்க விதைகளின் ஆரோக்கிய நிலையினைப் பரீட்சித்தல் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், நெல், மேலதிக உணவுப் பயிர் மற்றும் காய்கறிப் பயிர் உள்ளிட்ட குழுக்களுக்குரிய இனப்பெருக்க விதைகளின் ஆரோக்கிய நிலையினைப் பரீட்சித்தல் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் மூலம் நடைபெறுகின்றது. காய்கறி விதைகளில் ஏனைய தரங்களுக்குரிய விதைகளின் விதை ஆரோக்கியத்தைப் பரீட்சித்தலை மேற்கொள்ளுவது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் களப் பரீட்சிப்புக்களின் போது நேரம் மற்றும் சிக்கல் நிறைந்த நிலையிலான களத்தில் அவதானிக்கப்படும் பயிர்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படும்.

அவ்வாறே விவசாயத் திணைக்களத்தில் சமூக பொருளாதாரத் திட்டமிடல் மத்திய நிலையம் மற்றும் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை என்பன 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ''இலங்கையில் சந்தை மட்டத்தில் விதைகளின் தரம் தொடர்பில் ஏற்படும் ஆபத்துகள்'' தொடர்பான ஆராய்ச்சிக்கமைய சந்தையில் விற்பனைக்காக முன்வைக்கப்பட்டுள்ள காய்கறி விதைகளின் தரத்தன்மை தொடர்பில் அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகளில் சிக்கல் நிறைந்த சந்தர்ப்பங்களில் மட்டுமே விதை ஆரோக்கிய பரீட்சிப்புக்கு மாதிரிகள் அனுப்பப்படுவதுடன், ஒப்பந்த விதை வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளில், ஆரோக்கிய பரீட்சிப்புக்காக மாதிரிகள் அனுப்பப்படுவதும் குறித்த விதை பயிர்களில் நோய்த் தொற்றுச் சிக்கல் நிறைந்த நிலைமைகள் விதைச் சான்று வழங்கும் உத்தியோகத்தரினால் அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஆகும்.

இது தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) விதை மாதிரிகளைப் பெற்றுக் கொண்டு அவற்றைப் பரீட்சிப்பதற்கு ஆய்வுகூடங்களுக்கு அனுப்புகையில் அவை விதை மாதிரி சூழல்நிலைக்கு மறைக்கப்படாது ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அதற்காக போதுமானளவு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருக்காமைக்கான தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

(ii) விதைச் சான்றுபடுத்தல், விதைப் பரீட்சித்தல், விதைக் களத்தில் மதீப்பீடு செய்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பங்கள் இல்லாமை தொடர்பாக அவதானிக்கப்பட்டது.

(iii) விதைச் சான்றுபடுத்தல் சேவையின் மூலம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே தனியார் துறையில் 260 விதை விற்பனை நிலையங்களும் மற்றும் 220 அளவில் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் நெல், காய்கறி, மேலதிக உணவுப் பயிர் மற்றும் இறக்குமதி விதை தொடர்பில் சிக்கல் நிறைந்த நிலைமைகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(iv) தரத்தில் குறைவான விதை வகைகளை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு அந்த விதைகளைச் சந்தையிலிருநது அகற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தல், விதை விற்பனையை நிறுத்தல், விதைகளைக் களஞ்சியப்படுத்த வேண்டிய முறை தொடர்பில் தெளிவுபடுத்தல், விதை இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தல், சரியான தகவல்களை லேபில்களில்

உள்ளடக்காமை அவற்றை திருத்துமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், வியாபாரிகளினால் மீண்டும் அந்த வழிமுறைகள் பின்பற்றப்படுவது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் விவசாயத் திணைக்களத்தினால் விதைகளின் தரம் தொடர்பில் களத்தில் உற்பத்தியாளர், விற்பனையாளர், இறக்குமதியாளர் மற்றும் விவசாயிகளுக்கு சிக்கல்களை அவதானிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை சிறந்த ஒரு போக்காக அவதானிக்கப்பட்டது.

(ஆ) விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் மூலம் விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தில் ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விதை உற்பத்தியாளர்களின் விதை பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படுவதுடன், பரீட்சிப்புகளுக்கு விதைகளின் ஆரோக்கிய நிலை வெற்றி பெறாததன் அடிப்படையில் 2018, 2019 ஆகிய இரு ஆண்டுகளில் தக்காளி பயிரிட்ட 22 விவசாயிகளுக்குரிய விதை 114.9 கிலோகிராம் நிராகரிக்கப்பட்டு இருந்தது. விபரங்கள் இலக்கம் 2 இல் காட்டப்பட்டுள்ளது.

(இ) ஒப்பந்த விதை வேலைத் திட்டத்தின் கீழ் விதை உற்பத்திக்காக அறுவடையை உபயோகித்து விதையினை உற்பத்தி செய்ததன் பின்னர் அந்த விதை நிராகரிக்கப்படுதல் காரணமாக அதன் மூலம் வருமானம் பெறுவதற்கு விவசாயிகளுக்குள்ள சந்தர்ப்பம் அற்றுப் போகின்றது. இதற்கமைய அந்த விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடுசெய்வதற்கான முறைமைகளைத் தயாரித்தல் அல்லது அவ்வாறான நிலைமைகளுக்கு விளைச்சலை இரையாக்குவதைத் தவிர்ப்பதற்கு முறையான வழிவகைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாயிகளால் பயிர்ச்செய்கைக்காக கொள்வனவு செய்யப்பட்ட விதைகளைப் பயிரிடல் நடவடிக்கையில் பயன்படுத்துகையில் பின்வரும் சிக்கல்களுக்கு விவசாயிகள் முகங்கொடுக்க வேண்டியிருந்ததாக விவசாய பணிப்பாளர் நாயகத்தின் 2020 பெப்ரவரி 03 ஆம் திகதியிடப்பட்ட வி.தி/02/29/ஏ இலக்க கடிதத்திற்கமைய விதை முளைக்காமை, கலப்பு விதைகள் காணப்பட்டமை, விளைச்சல் தரமானதாக இல்லாமை போன்ற சிக்கல்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட அல்லது பயிர் நடவடிக்கைகளுக்காக விநியோகிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்துகையில் எழுந்த சிக்கல்கள்**

| **சிக்கலின் தன்மை** | **அறிக்கையிடப்பட்டுள்ள எண்ணிக்கை** |
|---|---|
| i. $KA_2$ மிளகாய் விதைகளில் பெயரளவில் வேறு வர்க்கம் கலந்து காணப்பட்டமை<br>ii. $M1_2$ மிளகாய் விதைகளில் வேறு வர்க்கங்களுக்குரிய தாவரங்கள் பெருமளவில் காணப்பட்டமை | 2017 - 02<br>2018 - 01<br>2019 - 01 |
| iii. விதைகள் முளைக்காமை – (கரட்) (கோவா,வெள்ளரி,போஞ்சி,கத்தரி) | 2017 - 01<br>2018 - 05 |
| iv. முறையான விளைச்சல் கிடைக்காமை மற்றும் வர்க்கத்திற்கே உரித்தான இலட்சணங்கள் இல்லாமை (கத்தரி, பீர்க்கங்காய், நோகோல்)<br>v. நோய்க் காரணிகள் காணப்பட்டமை (இறக்குமதி பாகல் விதை மூலம் பரவும் பயிடோ பிளாஸ்மா நோய்க்காரணி காணப்பட்டமை) | 2017 - 01<br>2018 - 02<br>2019 - 01<br>2017 - 01 |
| vi. இறக்குமதி செய்யப்பட்ட ஜப்பான் உருண்டை முள்ளங்கிக் கிழங்கு கறுப்பு நிறமாதல், பத்திரங்கள் கிரமமற்று இருத்தல் மற்றும் நிறத்துடன் காணப்படும். | 2019 - 01 |
| vii. போஞ்சி விதை என விற்கப்பட்ட விதை பயிரிட்டதும் பயிற்றம் பயிர் முளைத்தல் | 2019 - 01 |

(உ) தற்காலத்தில் பெருமளவில் காய்கறி விதை இறக்குமதி இடம்பெறுவதுடன், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள தாவர தொற்று நோய்த் தடுப்புச் சேவையின் மூலம் 2016/2017 பெரும் போகத்தில் இறக்குமதி விதைகளில் பெற்றுக் கொடுக்கப்பட்ட மாதிரிகள், விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் மூலம் களத்திலிருந்து பயிர்ச்செய்கைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட அவதானிப்புகளின்படி பாகல் வர்க்கத்தினைப் பயிர் செய்வதில் 03 – 04 வார காலத்தில், நோய்களுக்கு இரையாதல் மற்றும் தக்காளி விளைச்சலை அண்மிக்கையில் நோய்களுக்கு இரையாகி சேதமடைதல் தொடர்பில் அறிக்கையிடப்பட்டிருந்தது. பீர்க்கங்காய் பயிர் முதல் அறுவடையைப் பெற்றுக் கொள்ளப்பட்டதும் இரண்டாவது அறுவடை வைரஸ் தாக்கத்தினால் வெற்றியளிக்கவில்லை. அதற்கமைய பாரிய செலவில் விதை இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் அவற்றின் தரம் தொடர்பில் சிக்கல்கள் உள்நாட்டுக் காய்கறி பயிர்செய்கைக்குத் தீங்கான வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தவது அவதானிக்கக்கட்டது.

## 3.5 உள்நாட்டுக் காய்கறி விதை உற்பத்தி


விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குச் சொந்தமான 27 விதை உற்பத்திப் பண்ணைகள் காணப்படுவதுடன் அவற்றின் மூலம் விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய எதிர்பார்த்த உற்பத்தி இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரச விதை உற்பத்திப் பண்ணைகள் மூலம் காய்கறி விதை உற்பத்தி தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.5.1 குண்டசாலை விதை உற்பத்தி மத்திய நிலையத்தின் மொத்த விதை உற்பத்தி

விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குச் சொந்தமான 27 விதை உற்பத்திப் பண்ணைகள் மற்றும் ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் அனைத்து காய்கறி விதைகளும் தயாரித்தல் நடைமுறை குண்டசாலை விதை தயாரிப்பு மத்திய நிலையத்தின் ஊடாக இடம் பெறுவது மட்டுமன்றி கன்னோருவ காய்கறி விதை களஞ்சியசாலைக்கு கையளிக்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் தெரிவு செய்யப்பட்ட 12 விதை வகைகள் தொடர்பில் விதை உற்பத்திப் பண்ணைகள் மூலமும் மற்றும் ஒப்பந்த விதை வேலைத்திட்டம் மூலமும் உற்பத்தி செய்யப்பட்ட விதை கன்னோருவை விதை ஒழுங்குபடுத்தும் மத்திய நிலையத்திடம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் விதை தயாரிப்பு செயற்பாட்டின் இறுதியில் உற்பத்தி செய்யப்பட்ட விதை தொகை தொடர்பானவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | | 2018 | | 2019 | |
| **காய்கறி வகை** | **தயாரிக்கப் பட வேண்டிய விதைகளின் அளவு** | **தயாரிக்கப் பட்ட பின் விதைகளின் அளவு** | **தயாரிக்கப் பட வேண்டிய விதைகளின் அளவு** | **தயாரிக்கப் பட்ட பின் விதைகளின் அளவு** | **தயாரிக்கப்பட வேண்டிய விதைகளின் அளவு** | **தயாரிக்கப்பட்ட பின் விதைகளின் அளவு** |
| போஞ்சி | 2099.6 | 2078.5 | 2125.5 | 1982.9 | 1433.7 | 1361.5 |
| கத்தரி | 756.97 | 629.7 | 656 | 482.1 | 780 | 656 |
| கறிமிளகாய் | 636.65 | 558.6 | 323.534 | 276.9 | 173.6 | 140.5 |
| வெள்ளரி | 238.4 | 225.095 | 305.4 | 289.4 | 200 | 186 |
| பீர்க்கங்காய் | 123.3 | 112 | | | 370 | 334 |
| வெண்டிக்காய் | 2607.6 | 2076.4 | 4473.7 | 3892.3 | 3107 | 2724 |
| பூசணி | 156.05 | 118 | 222.6 | 192.1 | 143 | 114 |
| தக்காளி | 140.8 | 127.7 | 279.6 | 254.7 | 194 | 165 |
| காய்கறிகௌப்பி | 748.7 | 689.1 | 3598 | 3109.3 | 8742 | 7679 |
| பாகல் | 397 | 330.8 | 1263.7 | 1125.7 | 2076.85 | 1882 |
| பயற்றங்காய் | | | 506.2 | 421.1 | | |
| முள்ளங்கி | | | | | 164 | 146 |
| **மொத்தம்** | **7905** | **6946** | **13754** | **12027** | **17384** | **15388** |

**ஆதாரம் - காய்கறி விதை தயாரிப்பு மத்திய நிலையம் (குண்டசாலை)**




இதற்குரிய அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) விதைப்பண்ணைகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இலக்கை எட்ட முடியாத நிலையில் 2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் 12 காய்கறி வகைகளுக்குரியதான குண்டசாலை விதை தயாரிப்பு மத்திய நிலையத்திற்குரிய விதை தொகையானது முறையே 7,905 கிலோகிராம் 13,754 கிலோகிராம் மற்றும் 17,384 கிலோகிராம் ஆக உள்ளதுடன் விதை ஒழுங்குபடுத்தலில் அகற்றப்படும் தெகையானது முறையே 12.13 சதவீதம் 12.56 சதவீதம் மற்றும் 11.5 சதவீதம் என சரிவடைந்து சென்றுள்ள போதிலும் விதை உற்பத்தி மத்திய நிலையத்தில் விதை ஒழுங்குபடுத்தலில் அகற்றப்படும் விதைத் தொகையினை மேலும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரச விதை உற்பத்தி பண்ணைகளில் 2017 தொடக்கம் 2019 வரையிலும் போஞ்சி விதை உற்பத்தி முறையே 2,078 கிலோகிராம், 1,983 கிலோகிராம் மற்றும் 1,361 கிலோகிராம் என 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 34 சதவீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. போஞ்சி விதை இருப்பு காணப்பட்டதன் அடிப்படையில் விதை உற்பத்தியைக் குறைத்ததாகக் குறிப்பிடப்பட்ட போதிலும், போஞ்சி இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கையில் 2018 ஆம் ஆண்டில் 108 மெட்ரிக் டொன்னாக இருந்த இறக்குமதி போஞ்சி விதை அளவானது 2019 ஆம் ஆண்டில் 163 மெட்ரிக் டொன் வரையிலும் அதிகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் ஒப்பீட்டு

ரீதியில் விதை உற்பத்தி மேற்கூறிய வகையில் 34 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

(இ) குண்டசாலை விதை ஒழுங்கமைப்பு மத்திய நிலையத்தில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் தயாரிக்கப்பட்ட 12 காய்கறி விதை வகைகளின் மொத்த விதை உற்பத்தி முறையே 6,946 கிலோகிராம், 12,067 கிலோகிராம் மற்றும் 15,388 கிலோகிராம் என அதிகரித்து அருப்பினும் அந்த இருப்பினுள் காய்கறி கௌப்பி அளவு முறையே 10 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 50 சதவீதம் வரையிலும் அதிகரித்துச் சென்றுள்ளது. இதற்கமைய விதை உற்பத்தி அதிகரிப்பதற்கு காய்கறி கௌப்பி உற்பத்தி அதிகரித்துச் செல்லுதல் முக்கியமாகத் தாக்கம் புரிந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மொத்த விதை உற்பத்தி அதிகரிக்கையில் ஒரு காய்கறி விதை வகையின் பங்களிப்பு மேற்கூறிய வகையில் அதிகரித்து இருந்த போதிலும் கத்தரி, கறிமிளகாய், வெள்ளரி, பூசணி, தக்காளி உள்ளிட்ட விதை உற்பத்தியில் கருத்திற் கொள்ளத்தக்க அதிகரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) கறிமிளகாய் விதை உற்பத்தி 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 75 சதவீதத்தினால் குறைந்திருந்தது. இவ்வாறான காரணங்களின் அடிப்படையில் முக்கிய உள்நாட்டுக் காய்கறி பயிரான கறிமிளகாயின் விதை உற்பத்தி குறைவடைந்ததனால் விவசாயிகள் இறக்குமதி விதைக்கு அதிக விருப்பு தெரிவித்ததனால் பாரிய வெளிநாட்டு செலாவணியை செலவிட நேர்ந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 விதை உற்பத்திக்கான செலவு

விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குரிய நிர்வாக நடவடிக்கை, விதை உற்பத்திப் பண்ணைகள், விதைக் களஞ்சியசாலை, விதை விற்பனை நிலையம் மற்றும் விதை உற்பத்தி இயந்திரத்தைப் பராமரிப்புச் செய்வதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குமான பணிப்பாளர் சம்பளமாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் முறையே ரூபா 75 மில்லியன், ரூபா 115 மில்லியன் மற்றும் ரூபா 127 மில்லியனாக அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய செலவுகளுள் கருத்திற் கொள்ளத்தக்க அளவு விதை உற்பத்தி மற்றும் 27 விதை உற்பத்திப் பண்ணைகளின் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டதெனினும் விதை உற்பத்திப் பண்ணைகளின் செயலாற்றுகை இந்த பந்தியின் உப பந்திகளில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய அரச விதை உற்பத்திப் பண்ணைகள் மூலம் காய்கறி விதை உற்பத்தி செய்தல் தொடர்பாக 09 விதைப் பண்ணைகளின் விபரங்களுக்கமைய விதை உற்பத்தி இலக்கை எட்டுதல் பலவீனமான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மாதிரியாக குண்டசாலை, அளுத்தரம, பல்வெஹெரை, எழுவன்குளம் ஆகிய விதைப் பண்ணைகளில் 2016 ஆம் ஆண்டு சிறு போகம் தொடக்கம் 2018/2019 பெரும் போகம் வரையில் பயிரிடப்பட்ட 06 போகங்களில் 22 சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்ட விதை இலக்கில் எந்த விதமான விதைத் தொகையினையும் பெற்றுக் கொள்ளமுடியாமை மற்றும் ஏனைய பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எட்ட முடியாதிருத்தல் 51 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விதை உற்பத்தி தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

**(அ) குண்டசாலை விதை உற்பத்தி பண்ணை**

விதை உற்பத்தி வேலைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இலக்கை அடைய முடியாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதாக 2016 ஆம் ஆண்டு சிறுபோகம் தொடக்கம் 2018/2019 பெரும்போகம் வரையான 06 பயிற்செய்கை போகங்களில் விதை உற்பத்திப் பகுப்பாய்வு இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

(i) விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய 03 காய்கறி வகைகளின் (கத்தரி, தக்காளி, பாகல்) கலப்பின விதை உற்பத்தியானது 13 சதவீதம் தொடக்கம் 38 சதவீதத்திற்கு இடைப்பட்ட குறைந்த வீச்சில் காணப்பட்டதுடன் பயிர்ச்செய்கை வெற்றியளிக்காத காரணத்தால் வெள்ளிரிக்காய், கன்னோருவை விதை வர்க்கத்திற்குரியதான விதையை உற்பத்தி செய்ய முடியாதிருந்தது.

(ii) விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய 03 காய்கறி வகைகளின் (போஞ்சி, வெள்ளரி, புடலங்காய்) எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை விதை உற்பத்தி இலக்கில் முறையே 95 சதவீதம், 96 சதவீதம், 55 சதவீதம் உற்பத்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் பயிர்செய்கை வெற்றியளிக்காத காரணத்தினால் கத்தரி மற்றும் சிறு பயற்றங்காய் (புஷிடாவோ) எவ்வித விதைத் தொகையினையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(iii) விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய போஞ்சி, வெள்ளரி ஆகிய காய்கறி வகைகளில் சான்றுபடுத்தப்பட்ட விதையை உற்பத்தி செய்ய முடியாதிருந்ததுடன் 04 காய்கறி வகைகளின் (பீர்க்கங்காய், வெண்டி,

புடலங்காய், கத்தரி) விதை உற்பத்தியானது 45 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

இந்த விதை உற்பத்திப் பண்ணைகளில் விதை உற்பத்தி இலக்குகளை அடைவதற்கு முடியாது போனமை தொடர்பில் முக்கியமாக நீர் வழங்கல் சிக்கல்கள் தாக்கம் புரிந்துள்ளதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) அளுத்தரம அரச விதை உற்பத்திப் பண்ணை**

இந்த விதை உற்பத்திப் பண்ணைக்குச் சொந்தமான நிலப்பரப்பு 226.5 ஹெக்டயராக உள்ளதுடன் விதை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நிலப் பரப்பு 118.5 ஹெக்டெயராகும். பயன்படுத்தப்படாத நிலப் பரப்பு 108 ஹெக்டெயராகும். இந்த விதை உற்பத்திப் பண்ணை மூலம் மேலதிக உணவுப் பயிர் போன்றே காய்கறி விதை உற்பத்தியும் மேற்கொள்ளப்படுவதோடு, 2016 சிறு போகம் தொடக்கம் 2018/2019 பெரும்போகம் வரையான 03 வருடங்களில் காய்கறி விதை உற்பத்தி தொடர்பான பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 04 பயிர்ச்செய்கை போகங்களில் வெள்ளரி கலப்பின விதை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2018 சிறு போகம் மற்றும் 2018/2019 பெரும்போகத்தில் விதை உற்பத்தி வேலைத் திட்டத்திற்கமைய முறையே 75 கிலோகிராம், 78 கிலோகிராம் உற்பத்தி செய்யும் இலக்கைக் கொண்டிருந்த போதிலும் உற்பத்தி செய்யப்பட்ட விதையின் அளவானது முறையே 18 கிலோகிராம் மற்றும் 11 கிலோகிராம் ஆகும். அதற்கமைய இந்த இரு பயிர்ப் போகங்களிலும் விதை உற்பத்தியானது எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 76 சதவீதம் மற்றும் 86 சதவீதத்தினை பூரணப்படுத்திக் கொள்ளத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2018/2019 பெரும் போகத்திற்கான விதை உற்பத்தி வேலைத்திட்டத்திற்கமைய வெண்டி, புடலங்காய், பயற்றங்காய், பூசணி மற்றும் கறிமிளகாய் ஆகிய 5 காய்கறி வகைகளின் அடிப்படை விதை உற்பத்தி மூலம் வெண்டிக்காய் மட்டுமே எதிர்பார்க்கப்பட்ட விதை இலக்கினை பூரணப்படுத்தி இருந்தது. ஏனைய விதைகள் இலக்கினைப் பூரணப்படுத்துதல் ஆகக் கூடிய 82 சதவீதத்திற்கும் 3 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விதை வகை | 2018/2019 விதை உற்பத்தி வேலைத்திட்டம் | | |
|---|---|---|---|
| | **உற்பத்தி செய்யப்பட வேண்டிய விதையின் அளவு** | **உற்பத்தி செய்யப்பட்ட விதையின் அளவு** | **உற்பத்திச் சதவீதம்** |
| | கிலோகிராம் | கிலோகிராம் | நூற்றுக்கு |
| வெண்டி | 600 | 720.1 | 120 |
| புடலங்காய் | 300 | 63.1 | 21 |
| பயற்றங்காய் | 200 | 158.3 | 79 |
| பூசணி | 75 | 61.5 | 82 |
| கறிமிளகாய் | 37 | 1 | 2.7 |

ஆதாரம் - விதை உற்பத்திப் பண்ணை (அளுத்தரம)

(iii) 2018 சிறுபோகத்தில் புடலங்காய், பயற்றங்காய், கத்தரி மற்றும் கறிமிளகாய் ஆகிய காய்கறி வகைகளில் சான்றுபடுத்தப்பட்ட விதை உற்பத்தி இலக்கினை எட்டியிருந்தமை முறையே 49 சதவீதம், 14 சதவீதம், 223 சதவீதம் மற்றும் 6 சதவீதம் ஆகும். எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை விதை மட்டுமே பூரணப்படுத்தியிருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **விதை வகை** | **உற்பத்தி செய்யப்பட்ட விதைத் தொகை** | **உற்பத்திச் சதவீதம்** |
|---|---|---|
| | கிலோகிராம் | % |
| புடலங்காய் | 147.8 | 49 |
| பயற்றங்காய் | 87.8 | 14 |
| கத்தரி | 44.6 | 223 |
| கறிமிளகாய் | 2.2 | 6 |

(iv) அளுத்தரம விதை உற்பத்திப் பண்ணையில் 2018 சிறுபோகத்தில் சான்றுபடுத்தப்பட்ட கறிமிளகாய் விதை உற்பத்தி செய்வதற்குப் பெற்றுக்கொடுத்த விதை முளைக்காமையினால் எதிர்பார்க்கப்பட்ட விதை உற்பத்தி இலக்கான 38 கிலோகிராமில் 2.2 கிலோகிராம் விதைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

இதற்கமைய உள்நாட்டில் காய்கறி விதை உற்பத்தியானது எதிர்பார்க்கப்பட்ட வகையில் இடம்பெற்றிருக்காமையும், அது இறக்குமதி

விதைத் தொகை அதிகரிப்பில் தாக்கம் புரிந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

**(இ) பெல்வெஹெர அரச விதை உற்பத்திப் பண்ணை**

பண்ணைகளில் அடிப்படை உற்பத்தியை மேற்கொள்ளப்பட்டிராததுடன், பாகல், வெள்ளரி மற்றும் கறிமிளகாய் போன்ற வர்க்கங்களுக்குரிய சான்றுபடுத்தப்பட்ட விதை உற்பத்தியினை மேற்கொண்டிருந்தது. 2016 சிறுபோகத்தில் இருந்து 2018/2019 பெரும்போகம் வரையான 03 வருட காலத்தில் காய்கறி விதை உற்பத்தி தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் காணப்பட்டன.

(i) 2016 சிறுபோகம் தொடக்கம் 2018/2019 பெரும்போகம் வரையான 03 வருட காலத்தில் இறுதி போகத்தில் பாகல் விதை 80 கிலோகிராம் உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்டு 82 கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தமை சிறந்த போக்காகும்.

(ii) 2018 சிறுபோகத்தில் 10 கிலோகிராம் உற்பத்தி செய்வதனை இலக்காகக் கொண்டிருந்த போதிலும் 1.1 கிலோகிராம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட பயிற்செய்கை இலக்கின் 89 சதவீதத்தைப் பூரணப்படுத்திக் கொள்ளத் தவறியிருந்தது.

(iii) 2018 பெரும்போகத்தில் கத்தரி மற்றும் மிளகாய் ஆகிய வர்க்கங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விதை இலக்கில் முறையே 80 கிலோகிராம் மற்றும் 20 கிலோகிராம் ஆக இருந்ததுடன் உண்மையான உற்பத்தி முறையே 31.8 கிலோகிராம் மற்றும் 17.4 கிலோகிராம் ஆக உள்ளது. இதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட விதை இலக்கின் 60 சதவீதம் மற்றும் 17 சதவீதத்தினைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

(iv) பண்ணைகளில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மிளகாய் மற்றும் கத்தரிக்கான கலப்பின விதை உற்பத்தி முறையே 60 கிலோகிராம் மற்றும் 2 கிலோகிராமாக இலக்கு அமைக்கப்பட்டிருப்பினும் உண்மையான விதை உற்பத்தி முறையே 28.270 கிலோகிராம் மற்றும் 800 கிராமாக இருந்தது. அதற்கமைய எதிர்காரக்கப்பட்ட விதை உற்பத்தி இலக்கின் 53 சதவீதம் மற்றும் 60 சதவீதத்தினை பூரணப்படுத்தியிருக்கவில்லை.

**(ஈ) எழுவன்குளம் அரச விதை உற்பத்தி பண்ணை**

(i) பண்ணைகளில் தக்காளி மற்றும் கத்தரி ஆகிய 02 காய்கறி வகைகளுக்கான அடிப்படை விதை உற்பத்தி 2017 பெரும்போகம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், கத்தரிக்கு மட்டும் எதிர்பார்க்கப்பட்ட விதை உற்பத்தி இலக்கினை அடைவதற்கு முடியாதிருந்தது. தக்காளிக்கான எதிர்பார்க்கப்பட்ட விதை உற்பத்தி இலக்கின் 75 சதவீதத்தினை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ii) 2018/2019 பெரும்போகத்தில் பாகல் சான்றுபடுத்தப்பட்ட விதை 20 கிலோகிராம் உற்பத்தி செய்வதற்கு இலக்கு அமைக்கப்பட்டிருந்த போதிலும், விதையினை உற்பத்தி செய்யமுடியாதிருந்தது.

(iii) 2018 சிறுபோகத்தில் வெள்ளரி சான்றுபடுத்தப்பட்ட விதை 20 கிலோகிராம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 800 கிராம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.5.3 விதை உற்பத்திப் பண்ணைகளின் குறைபாடு

**(அ) காணிகளின் உரித்து**

விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமாகக் காணப்படும் 10 விதை உற்பத்திப் பண்ணைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய 05 பண்ணைகளுக்குரிய காணிகள் சட்ட ரீதியான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பண்ணைகளில் காணப்படும் அதிக நிலப் பரப்பில் விதை உற்பத்தி நடவடிக்கைக்காக நிலப் பரப்பினை அதி கூடிய அளவில் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பண்ணையின் பெயர் | நிலப்பரப்பு (ஹெக்டெயர்) | பயிர் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்டெயர்) | பயிர் செய்கைக்குப் பயன்படுத்தப் படாத நிலப்பரப்பு | சட்ட ரீதியான உரித்து |
|---|---|---|---|---|
| அம்பலன்தொட்ட | 22 | 18.8 | 3.2 | இல்லை |
| அம்பேபுஸ்ஸ | 60 | 10 | 50 | இல்லை |
| பட்ட அத்த-ஹுங்கம | 172 | 90 | 82 | இல்லை |
| மஹ இலுப்பளமை | 195.69 | 159.91 | 35.78 | ஆம் |
| பொலன்னறுவை | 200.75 | 146 | 54.75 | ஆம் |
| பீதுறுதலாகலை | 133 | 59 | 74 | ஆம் |
| எழுவன்குளம் | 20.05 | 18 | 2.05 | ஆம் |
| குண்டசாலை | 49 | 14 | 35 | இல்லை |
| பெல்வெஹெர | 5 | 13.5 | 1.5 | இல்லை |
| அளுத்தரம | 226.5 | 118.5 | 108 | ஆம் |

**ஆதாரம் - விவசாயத் திணைக்களம்**

**(ஆ) தொழிலாளர்களின் சேவை**

(i) அரச விதை உற்பத்திப் பண்ணை மூலம் விதை உற்பத்தி செய்கையில் தொழிலாளர் பெருமளவில் ஈடுபடுத்தல் இடம்பெறுகின்றது. நிலத்தினைப் பதப்படுத்தல், விதை நடுதல், நாற்று நடுதல், பயிர்களைப் பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் விதை ஒழுங்குபடுத்தல் ஆகிய செயல்களுக்கு தொழிலாளர் அவசியமாகும். ஆயினும் மஹஇலுப்பள்ளம, பெலன்னறுவை, குண்டசாலை, எழுவன்குளம் மற்றும் பல்வெவெஹர ஆகிய விதை உற்பத்திப் பண்ணை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய போதியளவு தொழிலாளர்களை ஈடுபடுத்த முடியாததன் அடிப்படையில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பாதகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இந்த 5 பண்ணைகளில் தொழிலாளர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| பண்ணையின் பெயர் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| மஹஇலுப்பள்ளம | தொழிலாளர் - நிரந்தரம் | - | 147 | - |
| | தொழிலாளர் - ஒப்பந்தம் | 44 | 39 | 05 |
| பெலன்னறுவை | தொழிலாளர் - நிரந்தரம் | 97 | 76 | 21 |
| குண்டசாலை | தொழிலாளர் - நிரந்தரம் | 15 | 06 | 09 |
| | தொழிலாளர் (25/2014 நிரந்தரம்) | 38 | 29 | 09 |
| எழுவன்குளம் | தொழிலாளர் - நிரந்தரம் | 25 | 15 | 10 |
| பெல்வெவெஹர | தொழிலாளர் - ஒப்பந்தம் | 25 | 21 | 04 |

**ஆதாரம்- விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் விதை உற்பத்திப் பண்ணை**

ii. விதை பண்ணை நடவடிக்கைக்குத் தேவையான ஒப்பந்தத் தொழிலாளர்களை குறித்த சந்தர்ப்பங்களில் ஈடுபடுத்திக் கொள்ள முடியாமையால் விதை பயிரிடுகையில் மற்றும் விளைச்சலை அறுவடை செய்கையில் குறித்த விதை உற்பத்தி இலக்குகளை பூரணப்படுத்துவதில் தடையாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் விதைப் பண்ணைகளில் ஒப்பந்த தொழிலாளருக்கு வழங்கும் சம்பளம் குறைவதன் அடிப்படையில் பயனிடல் நடவடிக்கைக்கு பொருத்தமான உடல் ஆரோக்கிய நிலையிலுள்ள தொழிலாளர்களை ஈடுபடுத்திக் கொள்வதற்குக் கடினமானதாக உள்ளதாக விதைப் பண்ணை முகாமையாளர்களிடமிருந்து தகவல்கள் கிடைத்துள்ளது.

**(இ) வன விலங்குகளினால் ஏற்படும் சேதம்**

குண்டசாலை பண்ணையில் காய்கறி விதை உற்பத்தியின் போது பயிர்ச்செய்கையில் பாதுகாத்துக் கொள்வதற்கு தீர்மானமான முறைமையொன்றினைத் தயாரிக்காமை காரணத்தால் பன்றிகள், மான்கள், முள்ளம் பன்றிகள் மற்றும் மயில்கள் போன்ற வனவிலங்குகளால் பெருமளவு விளைச்சல் அழிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. அது தொடர்பில் நிறுவன தகவல்களை அறியப்படுத்தல் மற்றும் பயிர்ச் செய்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உபகரணங்கள் கேட்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 23 ஆம் திகதி வரையிலும் அவை கிடைக்காததுடன் எழுவன்குளம் விதைப் பண்ணையில் காட்டு யானைகளினாலும் சேதம் ஏற்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

**(ஈ) பௌதிக வசதிகள்**

**(i)** குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணைக்கு விதைப் பண்ணையில் பயிரிடப்பட்ட தக்காளி விதை முதன்மை ஒழுங்கு செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவதற்கு நவீன இயந்திரம் காணப்படும் காரணத்தால் ரூபா.1,940,000 பெறுமதியான டெல்டா சீட் எக்ஸ்ட்ராக்ஷன் இயந்திரம் 2 (Delta seed extraction unit 2) பயன்படுத்தக்கூடியதாக இருக்கையில் அவை பயன்படுத்தப்படாது செயலற்றுக் காணப்படுவதுடன் அந்த இயந்திரத்தை வேறு பண்ணைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii)** பெல்வெஹெர அரச விதை உற்பத்திப் பண்ணையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்குத் தேவையான நிரந்தரமான நீர் வழங்கல் முறையொன்று இல்லாமை மற்றும் விதையினை வேறுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான இயந்திரப் பண்ணையில் காணப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் பயிரிடல் நடவடிக்கைக்கு நிலத்தைப் பயன்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் 03 இரு சக்கர ட்ரக்டர் மற்றும் 02 நான்கு சக்கர ட்ரக்டர் காணப்பட்ட போதிலும் அவை மேற்கூறிய வகையில் சிதைவுற்ற நிலையில் காணப்படுவதாகத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(உ) குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணை**

i. குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணைக்குச் சொந்தமான நிலப்பரப்பு 49 ஹெக்டயராக உள்ளதுடன் தற்போது விதை உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நிலப்பரப்பு 14 ஹெக்டெயராகும். போதியளவு நீர் வசதிகள் இல்லாத காரணத்தால் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய 06 ஹெக்டெயர் அளவிலான நிலத்தினை பயிர்செய்கையில் ஈடுபடுத்தக் கூடிய சந்தர்ப்பம் அற்றுப் போயுள்ளது.

ii. விதைப்பண்ணைகளில் மழை நீரைச் சேகரித்துக் கொள்ளுவதற்குச் சிறிய குளங்கள் காணப்படுவதுடன் அந்தக் குளங்களுள் மண் நிறைந்து காணப்படல் மற்றும் புல் வளர்தல் காரணமாக சேகரிக்கக்கூடிய நீரின் அளவு குறைந்துள்ளதாக 2019 திசெம்பர் 23 ஆம் திகதி குண்டசாலை விதை பண்ணையின் B பிரிவில் குளங்களைப் பௌதீக பரீட்சிப்பு செய்கையில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய விதை உற்பத்திக்கு போதியளவு நீர் தேவைப்பாட்டினைப் பூரணப்படுத்த முடியாதுள்ளமை விதை உற்பத்திக்கு சாதகமற்ற வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

iii. பண்ணைக்குச் சொந்தமான நிலப்பரப்பு ஒரே இடத்தில் அமைந்திருக்காததுடன் நிலமானது துண்டுகளாக மொத்த நிலப்பரப்பினைப் பிரதிநிதிப்படுத்துகின்றது. வேறு வேறாக காணப்படும் காணியை அளவிடும் நடவடிக்கையை மேற்கொண்டு மொத்த நிலப்பரப்பினையும் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் பண்ணைக்குச் சொந்தமான காணியினை அனுமதியின்றி ஆக்கிரமிப்புச் செய்யக்கூடிய ஆபத்து காணப்படுவதாகப் பண்ணை முகாமையாளரினால் தகவல் அறிக்கையிடப்பட்டிருந்தது.

iv. அரச விதை உற்பத்திப் பண்ணைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் வருடத்தின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் 238 மில்லிமீற்றர் - 271 மில்லிமீற்றர் வீச்சில் மழைவீழ்ச்சி காணப்படுவதால் பண்ணையின் மழைவீழ்ச்சி அறிக்கைக்கமைய அவதானிக்கப்பட்டது. அதற்கமைய பண்ணைக்கு நீரினைப் பெற்றுக் கொள்ளும் பிரதான மார்க்கம் மழை நீர் என்பதடன் அந்த மழை நீர் வருடத்தில் 03 மாதங்களுக்கு மட்டுமே கிடைக்கும் காரணத்தினால் சிறந்த நீர் முகாமைத்துவ முறைபேண வேண்டி இருப்பினும் அவ்வாறு இல்லாத காரணத்தால் விதை உற்பத்தி இலக்கைப் பூரணப்படுத்தி கொள்ள முடியாதிருந்துள்ளது.

v. குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணையில் பயிர்ச்செய்கைக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு நீர்த்துளி வள முறைமை 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்ததுடன் இந்த ஒழுங்குமுறை வினைத்திறனற்று காணப்படுவதால் பயிர்ச்செய்கைக்கு நீரை வழங்குகையில் அதிக நீர் வீணாதல் இடம்பெறுவதாக 2019 திசெம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

**(ஊ) எழுவன்குளம் விதை உற்பத்திப் பண்ணை**

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 03 நீர்ப் பம்பிகளுடன் நீர் வழங்கல் முறையினை அமைப்பதற்கும் மற்றும் 02 சூரிய பம்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா.2,369,000 செலவில் பண்ணைக்கு நீரைப் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளுகையில் நீரில் அடங்கியுள்ள உப்பின் அளவு காரணமாக பயிர்ச்செய்கையில் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன் நீரில் அடங்கியுள்ள உப்பின் அளவைக் குறைத்து பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான

நடவடிக்கைகள் எடுத்தல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு பெற்றிருக்கவில்லை.

### 3.5.4 ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டம்

விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. வேலைத்திட்டத்திற்காக விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு பதிவு செய்து பயிற்சியளிக்கப்பட்டதன் பின்னர் விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்திற்குரிய பிரதேச அலுவலகம் ஊடாக நிதி வழங்கும் அடிப்படையில் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக விதை விநியோகித்தல் மேற்கொள்ளப்படும் விவசாயிகளின் பயிர்களைப் பரீட்சிப்புக்கு உட்படுத்தி விளைச்சலை அறுவடை செய்ததன் பின்னர் பிரதேச அலுவலகத்தினுடாக விதை கொள்வனவு செய்தல்.

ஒப்பந்த காய்கறி விதை வேலைத்திட்டத்தின் கீழ் 2017 தொடக்கம் 2019 வரை விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்பட்ட காய்கறி விதைத் தொகை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பயிர் | 2017 விதைத் தொகை (கி.கிராம்) | 2017 பெறுமதி ரூபா | 2018 விதைத் தொகை (கி.கிராம்) | 2018 பெறுமதி ரூபா | 2019 விதைத் தொகை (கி.கிராம்) | 2019 பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| i.போஞ்சி | 3,010.5 | 3,360,450 | 7,108.55 | 7,959,630 | 14,701.25 | 16,818,325 |
| ii.பாகல் | 41.17 | 126,599 | 472.4 | 1,500,270 | 1,126.6 | 3,494,975 |
| iii.பீர்க்கங்காய் | 73 | 211,700 | 11.7 | 33,930 | 263.9 | 765,310 |
| iv.வெண்டி | 283 | 367,900 | 2,016.3 | 1,674,640 | 1,967.7 | 2,341,760 |
| v.புடலங்காய் | 149.5 | 373,750 | 171.2 | 428,000 | 293.2 | 733,000 |
| vi.தக்காளி | 2.3 | 27,370 | 2 | 27,000 | 33 | 441,980 |
| vii.சிறகவரை | 209.1 | 292,740 | 251.6 | 352,240 | 463.7 | 649,180 |
| viii.பசளி | 431.7 | 1,273,515 | 418.4 | 1,234,280 | 247 | 728,650 |
| ix.பயிற்றங்காய் | 187.6 | 487,760 | 1,293.5 | 3,363,100 | 4,111.2 | 10,689,120 |
| x.கறிமிளகாய் | 2 | 15,600 | | | 7.3 | 56,940 |
| xi.வெள்ளரி | 103.7 | 305,915 | - | - | 59 | 174,050 |
| xii.கத்தரி | 2.5 | 10,250 | - | - | - | - |
| xiii.புஷிடா | - | - | - | - | 2,380.85 | 2,618,935 |
| **மொத்தம்** | **4,496.07** | **6,853,549** | **11,745.65** | **16,573,090** | **25,654.7** | **39,512,225** |

**ஆதாரம் - விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையம்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் முழு வேலைத் திட்டங்களிலும் 67 சதவீதம், 60 சதவீதம், 57 சதவீதம், போஞ்சி விதை கொள்கை செய்யப்பட்டிருந்தது. இந்த மூன்று வருடங்களில் அதற்காக ரூபா.28,138,405 செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த செலவில் 45 சதசீதம் ஆகும்.

(ஆ) உள்நாட்டுக் காய்கறி விதை வகைகளின் தேவைப்பாடு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு அரச விதைப் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்ய முடியாத தொகையினை மட்டும் இந்த ஒப்பந்த வேலைத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வில் நிரூபிக்கப்படவில்லை.

(இ) குண்டசாலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய விவசாயிகள் விதை உற்பத்தியின் போது பயிர்ச்செய்கைக்கு இடையில் பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த தனிமை இடைவெளியைப் பேணாததனால் 2016 சிறுபோகம் தொடக்கம் 2018 சிறுபோகம் வரையான காலப்பகுதியில் 11 விவசாயிகளின் பயிர்ச்செய்கை வெற்றியளிக்காதிருந்ததாக குண்டசாலை விதைச் சான்றிதழ் சேவையின் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட களப் பரீட்சிப்பு மூலம் அவதானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த விவசாயிகளின் பயிர்கள் விதை உற்பத்திக்காகப் பங்களிப்புச் செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **பயிற் செய்கை போகம்** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **பயிரின் பெயர்** | **பயிரிடப்பட்ட நிலப்பரப்பு** (ஹெக்டெயர்) |
|---|---|---|---|
| 2016 சிறுபோகம் | 02 | கறிமிளகாய் | 0.1 |
| | | தக்காளி | 0.2 |
| 2016/17 சிறுபோகம் | 08 | தக்காளி | 0.1 |
| | | கறிமிளகாய் | 0.3 |
| | | மிளகாய் | 0.1 |
| 2018 சிறுபோகம் | 01 | தக்காளி | 0.1 |

**ஆதாரம் - விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (குண்டசாலை)**

(ஈ) விதை உற்பத்திக்கு ஒப்பந்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் ஆகக் குறைந்த தனிமை இடைவெளியைப் பேணாததனால் அவர்களின் பயிர்ச் செய்கை நிராகரிக்கப்பட்டதால் விதை உற்பத்தியின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்திற்கு முடியாதிருந்தது. அவ்வாறே விவசாயிகளுக்கும் எதிர்பார்த்த வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இந்த

நிலைமை சில வேளைகளில் விவசாயிகளால் கட்டுப்படுத்த முடியாத நிலைகளில் ஏற்படுகின்றமையால் அதற்காக விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது மட்டுமன்றி அவ்வாறான நிலைமைகள் ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்கு மற்றும் குறைப்பதற்கு ஒப்பந்த விதை வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் முக்கியமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு விவசாயிகளைப் பதிவுசெய்து அவர்களுக்குத் தேவையான காய்கறி விதைகள் வழங்குதல் இடம்பெறும். 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் குண்டசாலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலககம் மூலம் செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தக் காய்கறி மற்றும் விதை உற்பத்தி வேலைத் திட்டம் வறட்சி காலநிலை காரணமாக முழுமையாகத் தோல்வியடைந்திருந்தது. இந்த நிலைமை சில போகங்களில் அதிக மழை, சில போகங்களில் அதிக வறட்சிக் காலநிலை நிலவுவதனால் ஏற்படுகின்றது என்பதால் இதற்குப் பரிகாரமாக பச்சையில்லத்தில் காய்கறி விதை உற்பத்தியை மேற்கொள்ளல் அல்லது பயிர்ச் செய்கைக்கு நீரைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான வேலைத் திட்டமொன்று வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) சில போகங்களில் அதிக மழைவீழ்ச்சி, சில போகங்களில் அதிக வறட்சிக் காலநிலை நிலவுவதால் அதற்குப் பரிகாரமாக பச்சையில்லத்தில் காய்கறி விதையை உற்பத்தி செய்யமுடியும். கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய பிரதேசங்களில் 500 – 1000 சதுர அடி பரப்பிலான பல் பச்சையில்லம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பச்சையில்ல உரிமையாளர்களை இணைத்துக் கொண்டு விதைச் சான்றிதழ் உதவியுடன் விதை உற்பத்திக்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் குண்டசாலை விவசாய ஆலோசகரின் அனுமதி கேட்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) விதை மற்றும் நடுகைப் பொருள் இபிவிருத்தி மத்திய நிலையத்தினால் (Seed and planting material development centre) 2019 சிறுபோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 6 ஹெக்டெயர் பயிர் நிலத்தில் போஞ்சி விதை 6,000 கிலோகிராம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பயிர்ச்செய்கை போகத்தில் போஞ்சி விதை 12,439 கிலோகிராம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட போஞ்சி விதைத் தொகையினை விட 6,439 கிலோகிராம்

போஞ்சி விதை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| போஞ்சி வகை | பண்ணைகளால் கொள்வனவு செய்யப்பட்ட போஞ்சி விதையின் அளவு (கிலோகிராம்) | வேலைத் திட்டத்திற்கமைய கொள்வனவு செய்யப்பட வேண்டிய விதையின் அளவு (கிலோகிராம்) | மேலதிக விதையின் அளவு (கிலோ கிராம்) |
|---|---|---|---|
| லங்காபட்டர் | 4,740 | 2,500 | 2,240 |
| பலாங்கொடை நீலம் | 7,699 | 2,000 | 5,699 |
| TC | - | 1,500 | (1,500) |
| மொத்தம் | ---------- | ------- | --------- |
| | 12,439 | 6,000 | 6,439 |
| | ===== | ==== | ===== |

(ஏ) குண்டசாலை பிரதி விவசாயிப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் 2017 சிறுபோகம் தொடக்கம் 2019 சிறுபோகம் வரையிலான 6 பயிர்ச்செய்கைப் போகங்களில் செயற்படுத்தப்பட்ட ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டம் தொடர்பாகக் கணக்காய்விற்குக் கிடைக்கெற்ற தகவல்களுக்கமைய 82 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை கணக்கிடப்பட்டு மீள விதை பெற்றுக் கொடுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. பயிர்ச்செய்கைப் போகங்களில் விவசாயிகளுக்கு பயிரிடுவதற்காக வழங்கப்பட்ட காய்கறி விதை வர்க்கம், அந்த விதை வர்க்கத்திற்கு சொந்தமான விதை வகை, வழங்கப்பட்ட விதை தொகை மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கையின் இறுதியில் விவசாயிகளிடமிருந்து மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விதைத் தொகை தொடர்பான விபரங்கள் இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகளிடம் விதை கொள்வனவு செய்கையில் போஞ்சி விதை கொள்வனவு செய்தல் தொடர்பில் மட்டும் கூடிய கவனம் செய்யப்பட்டுள்ளதோடு ஏனைய விதை கொள்வனவு செய்கையில் அரச விதைப் பண்ணை மூலம் உற்பத்தி செய்ய முடியாத தொகையை மட்டும் குறித்த மூலப்பிரமாண அடிப்படையில் பொருளாதார ரீதியில் கொள்வனவு செய்வதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.5 தரவு முறைமையின் தேவைப்பாட்டினை வலியுறுத்தல்

விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குரிய பண்ணைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விதை மற்றும் ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட விதை, குண்டசாலை விதை ஒழுங்குபடுத்தும் மத்திய நிலையத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு காய்கறி விதை களஞ்சியசாலைக்கு கையளித்தல் மேற்கொள்ளப்படும். இந்த விதைகள் விற்பனை மத்திய நிலையங்கள் ஊடாக மட்டுமன்றி தனியார் துறையினூடாகவும் விதை விற்பனை மேற்கொள்ளப்படும். விற்பனை மத்திய நிலையம் மூலம் விற்பனை செய்யப்படும் காய்கறி விதை வகைகளின் விற்பனை தொடர்பான தகவல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுதல் அடுத்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு தேவையாகும். இந்தக் கணக்காய்விற்குத் தேவையான மேற்கூறிய துறைகளுக்குரிய தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் தேவைப்பட்டதுடன், விதை விற்பனை நிலையங்களில் விற்பனை தொடர்பான தரவுகள் 2020 ஜூன் 10 ஆம் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளமுடியாதிருந்தது. காய்கறி பயிர்ச்செய்கைக்குத் தேவையான விதை உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான அடிப்படைப் பொறுப்பு விவசாயத் திணைக்களத்திடம் உள்ளது என்பதால் அதற்குத் தேவையான தரவுகள் உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில் கணிணிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையின் தேவைப்பாடு தெளிவாகத் தெரிந்த போதிலும் அவ்வாறான முறைமையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 விதை இருப்பினை பேணுதல்

விதைகளைத் தரமானதாகக் களஞ்சியப்படுத்தக்கூடிய காலமானது விதை களஞ்சியப்படுத்த முன்பு இருந்த ஈரலிப்புச் சதவீதம், வெப்பம் மற்றும் ஈரத்தன்மை ஆகிய காரணிகளில் தங்கியுள்ளன. அதற்கமைய காய்கறி மற்றும் மேலதிக உணவுப் பயிர் களஞ்சியப்படுத்த வேண்டிய வெப்பம் 15 பாகை செல்சியசாக இருக்க வேண்டியதுடன் ஈரத்தன்மை 40 சதவீதமாகும். இந்த நிலைமையின் கீழ் விதையினை களஞ்சியப்படுத்தக் கூடிய ஆகக் கூடிய கால எல்லை 2–5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் என்பது விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு மத்திய நிலையத்தின் கருத்தாகும். அதற்கமைய விதை சிறிய காலத்திற்கு களஞ்சியப்படுத்துவதற்கு பொலிஸக் கொள்கலனையும் இடைக்காலத்திற்கு விதை வைத்திருக்க மூன்றடுக்கு அலுமினியம் கொள்கலன் மற்றும் உட்புறம் பொலித்தீன் பையுடனான பொலிஸக் கொள்கலனையும் நீண்ட காலத்திற்கு விதை சேகரிக்க மூன்றடுக்கு அலுமினியம் கொள்கலனையும் பயன்படுத்துதல் உசிதமாகும். விதை களஞ்சியப்படுத்துகையில் நல்ல காற்றோட்டம் கிடைத்தல், களஞ்சியசாலையை நோய் மற்றும் பீடைகளின்றி சுத்தமாக வைத்திருத்தல், தரை மற்றும் சுவர்களில் உரசாத வகையில் விதைகளைக் களஞ்சியப்படுத்தல், மழை நீர் ஒழுகாத வகையில் கூரை

சுவர் அமைக்கப்பட்டிருத்தல் மற்றும் குறைந்த வெப்பம் மற்றும் உலர் நிலையில் பேணுதல் விதைகளின் தரத்திற்கு நேரடியாக தாக்கம் எற்படுத்தும் எனினும் அது தொடர்பில் கருத்திற் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.





### 3.6.1 கன்னோருவை பிரதான காய்கறி விதைக் களஞ்சியசாலை

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குத் தேவையான தரமான விதைகள் தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுப்பதற்கு உற்பத்தி செய்யப்படும் விதை குறித்த தரத்திற்கமைய பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குரிய கன்னோருவை மற்றும் குண்டசாலை விதைக் களஞ்சியசாலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கன்னோருவை விதைக் களஞ்சியசாலையின் கனவளவு 119 கன மீற்றராக உள்ளதுடன் அங்கு களஞ்சியப்படுத்தக்கூடிய விதைத் தொகையானது அண்ணளவாக 30,000 கிலோகிராம் ஆகும். இந்தக் களஞ்சியசாலைக்கு மேலதிகமாக 02 கொள்கலன்கள் (Container) விதை களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள போதும் அதில் ஒரு களஞ்சியசாலையில் நிராகரிக்கப்பட்ட விதைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்தக் களஞ்சியசாலையில் அடிப்படை, இனப்பெருக்க, சான்றுபடுத்தப்பட்ட மற்றும் வியாபார ஆகிய விதைத் தரங்களுக்குரிய 32,295 கிலோகிராம் விதை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் அந்தத் தரங்களுக்குரிய 44,375 கிலோகிராம் விதை களஞ்சியப்படத்தப்பட்டிருந்தது. களஞ்சியப்படுத்தக்கூடிய விதைத் தொகையை விட பெருமளவு விதை தொகையினைக் களஞ்சியசாலையினுள் வைத்திருந்தமையால் விதைகளின் தரத்தினைப் பாதுகாப்பதற்கு அது தீங்கான வகையில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) களஞ்சியசாலையினுள் பல்வேறு விதை இனங்களுக்குரிய விதைகள் காணப்படுவதால் ஒவ்வொரு தரத்திற்குமுரிய விதைகளை வேறு வேறாகக் களஞ்சியப்படுத்துவதற்குப் போதுமான வசதிகள் இல்லாததனால் பல் விதைத் தரங்களுக்குரிய விதைகள் ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஆயினும் இந்த விதைகளை வெளிப்புறத்திலிருந்து அறிந்து கொள்ள முடிவது குறித்த விதைக் கொள்கலனில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட லேபல் மூலமாக என்பதுடன் அதில் மாறுதல் ஏற்படுமாயின் பல்வேறு தரங்களுக்குரிய விதைகள் கலப்பதற்கு இடமேற்படும் வகையில் அவை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கன்னோருவை பிரதான காய்கறி விதைக் களஞ்சியசாலையினுள் போதியளவு இடவசதி இல்லாததனால் அலுவலக சுற்றாடலிலும் மற்றும் அலுவலகத்திற்கு நுழையும் இடத்தின் வலது புறத்தில் 02 பெட்டி கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததை அவதானிக்க முடிந்ததுடன் அதில் ஒரு கொள்கலனில் தரமான விதைகள் களஞ்சியப்படத்தப்பட்டிருந்த போதிலும் அருகிலிருந்த மற்றைய கொள்கலனில் காலாவதியாகிய விதைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.



(ஈ) விவசாயத் திணைக்களத்தினால் அடிப்படை விதை அரச பண்ணைகள் ஊடாகவும் சான்றுபடுத்தப்பட்ட விதைகள் அரச பண்ணைகள், தனியார் நிறுவனம் மற்றும் அரச ஒப்பந்த விதை வேலைத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும். பாரியளவு செலவில் உற்பத்தி செய்யப்படும் இந்த விதைகள் உரிய வகையில் தேவைக்கேற்ப விநியோகித்தல் விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் கடமைப் பொறுப்பாகும். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி விதைகளுக்கான முளைத்தல் பலவீனமானதன் அடிப்படையில் ரூபா 38,338,200 பெறுமதியான விதை அண்ணளவாக 15,000 கிலோகிராம் அளவானவை பாவனைக்குட்படுத்த முடியாததாகக் காணப்பட்டது. இதற்கமைய தேவைக்கேற்ப விதை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை விநியோகித்தல், விதை உற்பத்தி இலக்கை சரியாக எதிர்வுகூறல் என்பன தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.







(உ) அரச விதை உற்பத்திப் பண்ணைகள் மற்றும் ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட 08 காய்கறி வகைகளுக்குரிய சான்றுபடுத்தப்பட்ட விதை 13,556 கிலோகிராம் 2018 ஆம் ஆண்டில் கன்னோருவை பிரதான காய்கறி களஞ்சியசாலைக்கு கிடைத்திருந்ததுடன் ஆண்டில் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு விநியோகிக்கப்பட்டிருந்த விதையின் அளவு 10,867 கிலோ கிராம் ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| காய்கறி வகை | பெறுவனவுகள் | விநியோகம் | 2018/12/31 திகதியில் மீதி |
|---|---|---|---|
| தக்காளி | 66 | 195 | 1,343 |
| வெண்டி | 2,480 | 1,593 | 2,014 |
| பாகற்காய் | 929 | 874 | 4,390 |
| பயற்றங்காய் | 1,287 | 2,507 | 2,322 |
| சிறகவரை | 421 | 711 | 3,134 |
| வெள்ளரி | 158 | 3 | 727 |
| பறங்கிக்காய் | 182 | 133 | 50 |
| போஞ்சி | 8,033 | 4,851 | 13,567 |
| **மொத்தம்** | **13,556** | **10,867** | **27,552** |

**ஆதாரம் - காய்கறி விதை மத்திய நிலையம் (விவசாயத் திணைக்களம்)**

(i) மேற்கூறிய தகவல்களுக்கமைய 2018 ஆம் ஆண்டில் போஞ்சி விதை 8,033 கிலோகிராம் களஞ்சியசாலைக்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் ஆண்டினுள் 4,851 கிலோகிராம் விதை விநியோகிக்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியசாலையில் 13,568 கிலோகிராம் போஞ்சி விதை காணப்பட்டது. போஞ்சி விதை விற்பனை செய்ததுடன் ஒப்பிடுகையில் கொள்வனவு செய்த விதைத் தொகை மிகக் கூடிய மட்டத்தில் காணப்படுவதுடன் காலாவதியான விதைத் தொகையில் போஞ்சி விதைகளின் பிரதிநிதித்துவம் மிக அதிகளவைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2018 ஆம் ஆண்டில் ரஷ்மி, திலினி, பாத்திய, மகேஷி மற்றும் KCI ஆகிய வர்க்கங்களுக்குரிய சான்றுபடுத்தப்பட்ட தக்காளி விதை 66.8 கிலோகிராம் களஞ்சியசாலைக்குக் கிடைத்திருந்ததுடன் 195 கிலோகிராம் விதைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. சில காலங்களில் தக்காளி அதிக விளைச்சல் பெறப்படுவதால் விளைச்சல் வீணாதல் இடம்பெறும். அதனால் தக்காளியைப் பயன்படுத்தி தக்காளி பாகு (தக்காளி சோஸ்) தயாரித்தல் தொடர்பில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்திய 5 தக்காளி வகைகளைப் பயன்படுத்தி ஆய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன் அதில் தக்காளி பாகிற்கு ஏற்ற மிகப் பொருத்தமான தக்காளி வகையாக ‘‘தரிந்து’’ எனும் தக்காளி வர்க்கம் அறியப்பட்டிருந்ததுடன் அந்த வர்க்கத்தை மேலும் முன்னேற்றுவது பொருத்தமானது எனக் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் அண்டில் தரிது தக்காளி விதை உற்பத்தி செய்தலோ அல்லது விநியோகித்தலோ இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) 2018 ஆம் ஆண்டில் பெருமளவில் பூசணி விளைச்சல் கிடைத்த காரணத்தால் அவற்றை விற்பனை செய்து கொள்ள முடியாத விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகி இருந்தனர். விவசாயிகள் பெருமளவில் இறக்குமதி பூசணி விதை பயிர் செய்வதில் ஈடுபட்டிருந்த போதிலும் வருடத்தில் சான்றுபடுத்தப்பட்ட பூசணி விதையான ''பத்மா'' எனும் வர்க்கத்தின் உற்பத்தி மற்றும் விநியோகம் மற்றும் களஞ்சியசாலையிலுள்ள விதைத் தொகை குறைந்த அளவில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(எ) இலங்கையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒவ்வொரு விதை வகையிலும் குறைந்தளவில் பேணப்பட வேண்டிய தொகை தீர்மானமாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 10 விதை வகைகளுக்குரிய பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த இருப்புத் தொகை பேணப்பட்டிருக்கவில்லை என்பது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருப்பு மீதிக்கமைய அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விதை வகை** | **பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த விதை இருப்பு** | **2018.12.31 ஆம் திகதியில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த விதையின் அளவு** | **பற்றாக் குறையாக காணப்பட்ட காலப்பகுதி** |
|---|---|---|---|
| போஞ்சி டீ.சீ | 300 | இல்லை | 03 வருடம் |
| கத்தரி பாதாகொட | 150 | இல்லை | 1½ வருடம் |
| கத்தரி எஸ்.எம்.164 | 200 | இல்லை | |
| பீர்க்கங்காய் எல்.ஏ.33 | 300 | இல்லை | |
| கத்தரி திண்ணைவேலி | 100 | இல்லை | |
| வெண்டி எம்.ஐ.5 | 300 | 127.850 | |
| பாகல் டீ.ஏ.2 | 500 | 51.700 | |
| வெள்ளரி எல்.வை 58 | 150 | இல்லை | |
| வெண்டி எம்.ஐ.7 | 200 | இல்லை | |
| பாகல் திண்ணைவேலி | 100 | 5.400 | |
| புடலங்காய் திண்ணைவேலி | 100 | இல்லை | 02 வருடம் |
| கத்தரி அமந்தா (கலப்பினம்) | 25 | 8.700 | |
| கத்தரி லேனஇரீ (கலப்பினம்) | 25 | இல்லை | |
| போஞ்சி சஞ்சய | 200 | இல்லை | 01 வருடம் |

**ஆதாரம் - காய்கறி விதை மத்திய நிலையம் (விவசாயத் திணைக்களம்)**

4 வகை விதைகளுக்குக் குறைந்த பட்சமாக 925 கிலோகிராம் விதை பேணப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியசாலையில் இருந்த விதையின் அளவு 193.650 கிலோகிராம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தினால் அவ் விற்பனை நிலையங்கள் ஊடாகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு விற்பனை செய்யப்பட்ட சிறகவரை – கிரஷ்ணா மற்றும் தக்காளி – திலினி எனும் வர்க்கங்களில் வர்க்க ரீதியான இலட்சண மாற்றங்களினால் விதை விற்பனை செய்தல் 2018 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் சிறகவரை – கிரஷ்ணா மற்றும் தக்காளி – திலினி ஆகிய வர்க்கங்களுக்குரிய ரூபா.7,530,037 பெறுமதியான 373 கிலோகிராம் விதை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**2019.12.01 ஆம் திகதியில் உள்ளபடியான விதை இருப்பு**

| விதை வகை | அடிப்படை கிலோ கிராம் | சான்றுபடுத்தப்பட்ட விதை | இனப் பெருக்க விதை | மொத்தம் | ஒரு கிலோ கிராமின் விலை |
|---|---|---|---|---|---|
| சிறகவரை– கிரஷ்ணா | 6.860 | - | 37.790 | 44.650 | 3,000 |
| தக்காளி– திலினி | 135.055 | 192.850 | 0.810 | 328.715 | 22,500 |

(ஐ) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தினால் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் இனப்பெருக்க விதை ஆகக் குறைந்தளவு விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் காய்கறி விதை மத்திய நிலையத்தில் போஞ்சி (சஞ்சய), பாகல் (திண்ணைவேலி) ஆகிய வகைகளில் முறையே 200 கிலோகிராம் மற்றும் 150 கிலோகிராம் என குறைந்த குறைந்த இருப்பையே களஞ்சியசாலையில் பேண வேண்டியிருப்பினும், 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் போஞ்சி மற்றும் கத்தரி விதைகள் இருப்பில் இருக்காததுடன் பாகல் விதை 5.4 கிலோகிராம் மட்டுமே காணப்பட்டது.

(ஒ) பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 14 காய்கறி வர்க்கங்களுக்குரிய விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் பிரதான காய்கறி விதைக் களஞ்சியசாலையில் 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் காணப்பட்ட இருப்பு தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பாகல் (நிரோகி F1 Hybrid) எனும் காய்கறி வர்க்கத்தினை அடிப்படை, இனப்பெருக்க மற்றும் சான்றுபடுத்தப்பட்ட ஆகிய விதைத் தரங்களுக்குரிய எந்த விதமான விதைத் தொகையும் கன்னோருவை விதைக் களஞ்சிய சாலையில் காணப்படவில்லை என்பதும் மற்றும் கத்தரி (Hordi Lenair) சான்றுபடுத்தப்பட்ட விதை 25 கிலோகிராம் எனும் சிறிய அளவு மட்டுமே காணப்பட்டது என்பதும் அவதானிக்கப்பட்டது.
இதன் காரணமாக அந்த வர்க்கத்தினை உற்பத்தி செய்து பயிர் செய்வோரிடையே விநியோகிப்பதற்கு தீர்மானமான வேலைத் திட்டமொன்று இல்லாமை அவதானிக்கப்பட்டது.

(ii) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குரிய கன்னோருவ பிரதான காய்கறி விதைக் களஞ்சியசாலையில் 2019 திசெம்பர் 01 ஆம் திகதியிலான இனப்பெருக்க விதை தொடர்பான தகவல்களுக்கமைய 65 காய்கறி வர்க்கங்களுக்கான இனப்பெருக்க விதையினது அதிகூடிய தொகை 216 கிலோகிராமிற்கும் ஆகக் குறைந்த தொகை 15 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அந்த விதை வர்க்கங்களில் விதைக் களஞ்சியசாலையில் பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த இருப்புத் தொகை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன், கீழ் காணும் 17 காய்கறி வர்க்கங்களின் இனப்பெருக்க விதை தொகையானது 01 கிலோகிராமிலும் குறைந்த தொகையில் காணப்பட்டது.

| விதை வகை | விதை வர்க்கம் | 2019 திசெம்பர் 01 ஆம் திகதியிலான விதை இருப்பு (கிராம்) |
|---|---|---|
| கறிமிளகாய் | L.Y.W. | 570 |
| பீர்க்கங்காய் | ஆசிரி | 105 |
| பயற்றங்காய் | ஹவரி | 970 |
| புஷிடா | பீ.எஸ்.1 | 800 |
| வெண்டி | ஏம்.ஐ.5 | 350 |
| புடலங்காய் | திண்ணைவேலி | 260 |
| பசளி | யோத | 20 |
| தக்காளி | டீ.146 | 315 |
| தக்காளி | திலின | 810 |
| தக்காளி | கே.சீ.1 | 915 |
| தக்காளி | ரவி | 600 |
| தக்காளி | ரஷ்மி | 775 |
| தக்காளி | லங்கா ஷவர் | 475 |
| சிறகவரை | எஸ்.எல்.எஸ்.44 | 50 |
| வெண்டி | OK – 2 | 150 |
| கறிமிளகாய் | பிரார்தனா Hyw.F1 | 15 |
| பூசணி | பத்மா | 710 |

**ஆதாரம் - காய்கறி விதை மத்திய நிலையம் (விவசாயத் திணைக்களம்)**

### 3.6.2 குண்டசாலை அரச விதைக் களஞ்சியசாலை

(அ) 2004 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட குண்டசாலை விதைக் களஞ்சியசாலை அரச விதை உற்பத்திப் பண்ணைச் சுற்றாடலில் கன்னோருவ காய்கறி விதை மத்திய நிலையத்திற்குரிய குண்டசாலை விதைக் களஞ்சியசாலையின் கனவளவு 225 கனமீற்றராக உள்ளதுடன் அதில் களஞ்சியப்படுத்தக்கூடிய விதையானது அண்ணளவாக 40,000 கிலோகிராம் ஆகும். ஆயினும் களஞ்சியப்படுத்தப்படும் விதை வகைக்கமைய களஞ்சியப்படுத்தக்கூடிய விதையின் அளவு வேறுபடக்கூடும். 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விதைத் தொகை 29,726 கிலோகிராமாக இருந்ததுடன் 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் 30,785 கிலோகிராம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. விதைக் களஞ்சியசாலையில் 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் காணப்பட்ட 16 காய்கறி வகைகளுக்கான சான்றுபடுத்தப்பட்ட விதைகளில் 74 சதவீதம் இரண்டு வகையான காய்கறி விதைகள் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலக்கம் | காய்கறி வகை | தொகை கிலோகிராம் | சதவீதம் |
|---|---|---|---|
| i. | போஞ்சி | 15,318.700 | 49.76 |
| ii. | பயற்றங்காய் | 7,412.700 | 24.08 |
| iii. | வெண்டிக்காய் | 2,812.775 | 9.14 |
| iv. | பாகல் | 1,763.200 | 5.73 |
| v. | கௌப்பி | 1,007.700 | 3.27 |
| vi. | முள்ளங்கி | 848.200 | 2.76 |
| vii. | சிறகவரை | 438.700 | 1.43 |
| viii. | பசளி | 355.400 | 1.15 |
| ix. | புடலங்காய் | 337.300 | 1.10 |
| x. | கீரை | 140.690 | 0.46 |
| xi. | கத்தரி | 93.300 | 0.30 |
| xii. | வெள்ளரி | 81.950 | 0.27 |
| xiii. | தர்பூசணி | 70.300 | 0.23 |
| xiv. | கறிமிளகாய் | 50.000 | 0.16 |
| xv. | தக்காளி-திலினி | 33.600 | 0.11 |
| xvi. | சுண்டங்கத்தரி-பிந்து | 20.800 | 0.07 |
| | | 30,785.315 | |

**ஆதாரம் - காய்கறி விதை மத்திய நிலையம் (விவசாயத் திணைக்களம்)**

(ஆ) குண்டசாலை அரச விதைக் களஞ்சியசாலையில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட இருப்பு தொகை நிலைமை தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2019 திசெம்பர் 01 ஆம் திகதியில் களஞ்சியசாலையில் மொத்த சான்றுபடுத்தப்பட்ட விதைத் தொகையில் 50 சதவீதம் போஞ்சி விதை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) களஞ்சியசாலையில் காணப்படும் சான்றுபடுத்தப்பட்ட விதை இருப்பில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய பயிற்றம், பாகல் மற்றும் புடலங்காய் ஆகிய வர்க்கங்களுக்குரிய 3,783 கிலோகிராம் விதைகள் காணப்படுவதுடன் அந்தத் தொகையானது மொத்த விதைத் தொகையில் 12 சதவீதமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) உற்பத்தி வேலைத் திட்டதின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட காய்கறி விதை உற்பத்தி இலக்கை அடைவதற்கு முடியாததால் 5 காய்கறி வகைக்கான இருப்பு மட்டம் 100 கிலோகிராமிலும் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) விதை களஞ்சியப்படுத்துகையில் நன்றாகக் காற்றோட்டம் கிடைக்காத வகையில் விதைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை மற்றும் சுவருடன் உராயும் வகையில் விதைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக காலவாதியான விதைகள் களஞ்சியசாலையில் காணப்பட்டது என்பது 2019 திசெம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

(v) குண்டசாலை விதைக் களஞ்சியசாலையில் காலாவதியான 609.9 கிலோகிராம் பாகல் விதை காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் விதை விற்பனை விலைக்கமைய அதன் பெறுமதி ரூபா.3,354,450 ஆக இருந்ததுடன் குறித்த விதைத் தொகையினை ஆராய்ச்சி நடவடிக்கைக்காகப் பெற்றுக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததோடு களஞ்சியசாலை சுற்றாடலில் இருந்து அகற்றப்பட்டிருக்காததால் உயிர்ப்புள்ள விதைத் தொகையுடன் குறித்த விதைத் தொகையும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

சிறந்த இருப்புக் கட்டுப்பாடு முறையில் குறைந்தளவிலாவது பேணப்பட வேண்டிய இருப்பு மட்டத்தினைத் தீர்மானித்து அதற்கமைய குறித்த இருப்புத் தொகையினைப் பேணுதல், குறித்த தொகை காலாவதியாகும் முன்னர் பயன்படுத்துதல் மற்றும் காலாவதியான விதைத் தொகையை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய தரமான விதைத் தொகைகளிலிருந்து வேறுபடுத்தி வேறு இடத்தில் வைக்கப்பட வேண்டியதுடன் மேற்கூறிய

அவதானிப்புகளுக்கமைய களஞ்சியசாலையிலுள்ள இருப்பானது குண்டசாலை விதைக் களஞ்சியசாலையின் இருப்புக் கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.7 விதைகளின் விற்பனை

### 3.7.1 விதைகளின் விலையை தீர்மானித்தல்

விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குரிய விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் காய்கறி விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி விதைகளும் மற்றும் ஒப்பந்த விதை வேலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் விதைகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த விதை விற்பனை விலையைத் தீர்மானித்தல் விவசாயத் திணைக்களத்தின் விலைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், விதை உற்பத்திச் செலவு அல்லது கொள்வனவு செய்தலின் மொத்த செலவின் யாதேனும் சதவீதத்தின் இலாபத்தினைச் சேர்த்து விலை தீர்மானிக்கப்படும். விதை விலை தீர்மானிக்கையில் இலாபத்தினை மட்டுமல்லாது சமூகப் பொருளாதாரத் தாக்கங்களும் கவனத்திற் கொள்ளப்படும். தனியார் துறை நிறுவனங்களினால் உள்நாட்டு விதை போன்றே இறக்குமதி விதையும் விற்பனை செய்யப்படுவதுடன் அதற்கான விலையைத் தீர்மானித்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.7.2 விதை மற்றும் நடுகைப் பொருள் மத்திய நிலையத்திற்குரிய விற்பனை நிலையங்களுக்கூடாக விதை விற்பனை செய்தல்

(அ) விவசாயத் திணைக்களத்திற்குரிய விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் மூலம் அதற்குச் சொந்தமான விதைப் பண்ணை மூலமும் ஒப்பந்த வேலைத் திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி செய்யப்படுவதுடன், அந்த விதையை விற்பனை செய்வதற்கு கன்னோருவ காய்கறி விதை மத்திய நிலையம் உள்ளிட்ட விதை மற்றும் 30 நடுகைப் பொருள் விற்பனை நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படும். விதை விற்பனை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாதம் | விதை விற்பனை வருமானம் ரூபாய் | | |
|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** |
| ஜனவரி | 6,914,396 | 5,397,696 | 5,928,669 |
| பெப்ரவரி | 5,055,952 | 2,860,729 | 4,319,827 |
| மார்ச் | 5,409,303 | 7,729,935 | 5,444,467 |
| ஏப்பிரல் | 2,428,986 | 3,450,199 | 4,489,528 |
| மே | 3,540,110 | 3,333,740 | 5,096,566 |
| ஜூன் | 3,112,632 | 436,352 | 5,607,677 |
| ஜூலை | 3,405,144 | 2,751,426 | 4,685,399 |
| ஓகஸ்ட் | 5,865,924 | 5,728,412 | 6,001,679 |
| செப்டெம்பர் | 17,156,780 | 5,236,821 | 5,472,514 |
| ஒக்டோபர் | 14,328,965 | 11,316,323 | 6,127,608 |
| நவம்பர் | 6,227,246 | 8,260,611 | 5,623,303 |
| திசெம்பர் | 5,832,785 | 16,248,750 | 1,531,916 |
| 2020/06/10 பதிலின் அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டிய வருமானம் | | | 2,069,620 |
| **மொத்தம்** | **79,278,223** | **76,680,996** | **62,398,777** |

**ஆதாரம் - காய்கறி விதை மத்திய நிலையம் (விவசாயத் திணைக்களம்)**

இந்தத் தரவுகள் மேலும் பகுப்பாய்விற்குட்படுத்தி இணைப்பு இலக்கம் 5 இல் காட்டப்பட்டுள்ளதுடன் உரிய அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

கன்னோருவை பிரதான காய்கறி விதை களஞ்சியசாலை அருகிலுள்ள விற்பனை நிலையத்தின் மொத்த விதை விற்பனை வருமானம் 2017 தொடக்கம் 2019 வரையில் முறையே ரூபா 79,278,223, ரூபா 76,680,996 மற்றும் ரூபா 62,398,777 எனக் குறைவடைந்து சென்றுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் விதை விற்பனை வருமானம் 21 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இதில் செல்வாக்கு செலுத்தும் காரணங்கள் எவை என்பதை விவசாயத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவித்திருக்கவில்லை.

**(ஆ) உள்நாட்டு விதைகள் கொள்வனவு செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள்**

(i) காய்கறி விற்பனை செய்து கொள்வதற்காக தம்புள்ளை மற்றும் தம்புத்தேகம மத்திய நிலையங்களுக்கு வருகை தரும் விவசாயிகளிடம் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கமைய பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் உள்நாட்டு விதையானது சந்தைகளில் கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளது என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) கமநல சேவைகள் மத்திய நிலையங்களில் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கமைய தேவையான சந்தர்ப்பங்களில் விதை கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளதால் பயிர்ச்செய்கைப் போகங்களின் ஆரம்பத்திலேயே விவசாயிகளுக்கு விதை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) பதுளை மாவட்ட விவசாய அமைப்பு ஆணையத்தினால் 2017 ஜூலை 18 ஆம் திகதி பாதுளை மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் மரபற்று அழியும் உள்நாட்டு விதை வகைகளைப் பாதுகாப்பதற்கு விவசாய அமைப்புகளுக்கு உள்நாட்டு விதைகளை பெற்றுக் கொடுக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய உள்நாட்டு விதைகளுக்கு விவசாயிகளிடம் அதிக கேள்வி காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

### 3.7.3 கமநல சேவைகள் மத்திய நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படும் விதை விற்பனை செய்தல் செயன்முறை

விவசாயிகளுடன் நடவடிக்கைகளில் ஈடுபடும் நெருங்கிய அரச நிறுவனமான கமநல சேவைகள் மத்திய நிலையத்தினூடாக இந்த காய்கறி விதை விநியோகித்தல் மேற்கொள்ளும் பொறிமுறை தொடர்பில் நாடுமுழுவதும் அமைந்துள்ள 15 கமநல சேவைகள் மத்திய நிலையங்களில் 2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியினுள் விதை கொள்வனவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்டது.

அது தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 15 கமநல சேவைகள் மத்திய நிலையங்களில் 04 மட்டுமே 2017 தொடக்கம் 2019 வரையான காலப் பகுதியினுள் விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குரிய விற்பனை நிலையங்கள் மூலம் முறையே ரூபா.188,240, ரூபா 227,732 மற்றும் ரூபா 79,205 பெறுமதியான விதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 11 மத்திய நிலையங்களும் தனியார் துறை நிறுவனங்களில் முறையே ரூபா 1,126,106, ரூபா 1,234,375 மற்றும் ரூபா 1,045,344 பெறுமதியான விதைகள் கொள்வனவு செய்திருந்தன.

(ஆ) கமநல சேவைகள் மத்திய நிலையத்தினூடாகக் காய்கறி விதைகள் கொள்வனவு செய்கையில் விதை விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொடுக்கும் வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது. இங்கு வெளி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சில வசதிகள் அரச நிறுவனங்களால்

வழங்கப்படாததால் வெளி நிறுவனங்களிடமிருந்தே விதைகளைக் கொள்வனவு செய்வதற்கு முற்படுவது அவதானிக்கப்பட்டது.

வெளிவாரி நிறுவனங்களினால் வழங்கப்படும் வசதிகள் பின்வருவனவாகும்.

- கடன் அடிப்படையில் விதை பெற்றுக் கொடுத்தல்.
- விற்கப்படாது எஞ்சியுள்ள மற்றும் காலாவதியான விதைகளை மீளவும் பெற்றுக் கொள்ளல்.
- கமநல சேவைகள் மத்திய நிலையத்திற்கு விதைகளை கொண்டு செல்லல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் விதைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- விதை கொள்வனவின் போது கழிவுகள் வழங்குதல்.
- விதை முளைத்தல் பலவீனமான நிலைமையில் காணப்படாமை.

இந்த வசதிகள் விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் மூலம் விநியோகிக்கப்படும் விதை தொடர்பில் வழங்கப்படவில்லை என்பது மேற்கூறிய கமநல சேவைகள் மத்திய நிலையத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தமையால் சந்தை ஆய்வு மூலம் சிக்கல்களை அறிந்து தேவையான பரிகாரங்களைச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7.4 செயற்திட்ட மற்றும் பயிற்சிப் பிரிவின் வேலைத் திட்டத்திற்கு விதை கொள்வனவு செய்தல்**

விவசாயத் திணைக்களத்தின் விஸ்தரிப்பு மற்றும் பயிற்சிப் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட விதை விநியோகித்தல் வேலைத் திட்டதிற்கு விதை கொள்வனவு செய்கையில் 2017 ஆம் ஆண்டில் மற்றும் 2019 ஆம் ஆண்டில் கறிமிளகாய், கொடி போஞ்சி மற்றும் வெண்டிக்காய் ஆகிய 3 விதை வகைகளிலும் 65.3 கிலோகிராம் விதையினை ரூபா 27,800 இற்குத் தனியார் விற்பனை நிலையங்களிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.7.5 விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டு விதைகள் விவசாயிகளிடையே பிரபல்யம் அடையாமையில் தாக்கம் செலுத்தும் காரணிகள்**

விவசாயத் திணைக்களத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டு விதைகள் விவசாயிகளிடையே பிரபல்யம் அடையாமையில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பின்வருமாறு உள்ளதாக விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் வி.தி/அ.வி.ஜ.சங்/02/29/A இலக்கம் கொண்டதும் 2020 பெப்ரவரி 13 ஆம் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான நீண்ட கால வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியின் அடிப்படையில் விதை உற்பத்தி வேலைத் திட்டத்தினை ஒழுங்கு செய்தல் மற்றும் கொள்வனவு செய்யும் விதைத் தொகையினைத் தீர்மானித்தல்.

(ஆ) தற்போது நாடளாவிய ரீதியில் 34 விற்பனை நிலையங்கள் காணப்படுவதுடன், விற்பனை அதிகரிப்பிற்குப் போதியளவு விற்பனை செய்யும் இடங்கள், போக்குவரத்து வசதிகள் மற்றும் உத்தியோகத்தர் பற்றாக்குறையினால் சரியான போகத்திற்கு விதையினை விநியோகிப்பதிலுள்ள கடினத்தன்மை நிலவுகின்றது. யாழ்ப்பாணம், இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் விற்பனை நிலையங்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் இல்லாமை.

(இ) உயர் தரத்திலான உள்நாட்டு விதை வகைகளுக்கு காணப்படும் கேள்வியை விட தொகையளவில் அதிக விளைச்சலைத் தரும் இறக்குமதிக் கலப்பின விதைகளுக்கு அதிக கேள்வி காணப்படுவதால் மற்றும் அவற்றுக்கு கவர்ச்சிகரமான பொதிகள் தனியார் துறைகளினால் வழங்கப்படுதல்.

(ஈ) போதியளவு குளிரூட்டப்பட்ட மற்றும் சாதாரண களஞ்சியசாலை வசதிகள் இல்லாமை.

(உ) பண்ணைகளுக்குப் போதியளவு ஊழியர் மற்றும் இயந்திரப் பற்றாக்குறையினால் உரிய போகங்களுக்கு விதை உற்பத்தி செய்து ஒழுங்குபடுத்தி பெற்றுக் கொடுப்பதற்கு முடியாமை.

(ஊ) நாடு முழுவதும் கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றில் காணப்படும் விற்பனை நிலையங்கள் ஊடாக தனியார் துறையினரால் உற்பத்தி செய்யப்படும் விதை விற்பனைக்கு அதிக ஆர்வம் காட்டுதல் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் விதை விற்பனைக்கு குறைந்த முக்கியத்துவம் காணப்படுதல் இதற்காக தனியார் துறையினரால் வழங்கப்படும் கூடிய கழிவுப் பெறுமதி என்பன பிரதான காரணங்களாகும்.

(எ) உள்நாட்டு விதைகள் தொடர்பில் விவசாயிகள் போதியளவு தெளிவுறுத்தப்படாமை.

(ஏ) நடமாடும் சேவை வாகனங்கள் போதியளவு இல்லாமை.

(ஐ) ஒதுக்கப்பட்ட நிதி வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் காய்கறி பயிர்ச்செய்கையில் விவசாயிகளை ஈடுபடுத்துவதற்கு நடாத்தப்படும் பயிற்சி முன்மாதிரிகளின் அளவு குறைதல் மற்றும் செயற்றிட்டத்தின் கீழ் காய்கறி பயிர்செய்கை அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளும் போக்கு குறைதல் மற்றும் இலவசமாக விதை வழங்கும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தல் குறைதல்.

(ஒ) தேவையான கால எல்லைக்கு மற்றும் குறித்த தொகையில் விதை விநியோகம் இல்லாமை மற்றும் கிராமிய மட்டத்திலும் மற்றும் உள்நாட்டு வர்க்கங்களைக் களஞ்சியப்படுத்துகையில் மற்றும் ஒழுங்குபடுத்துகையில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக முளைத்தல் வீதம் குறைதல்.

(ஓ) விவசாயத் திணைக்களத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டு கலப்பின காய்கறி வர்க்கங்களின் விதை உற்பத்திக்கு தனியார் துறையின் பங்களிப்பு குறைதல்.

## 04. பரிந்துரைகள்

(அ) அரச விதைக் கொள்கைக்கமைய பொருத்தமான விதையை பரீட்சிப்பின் மூலம் உறுதி செய்த பின்னர் அந்த விதையை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் போது மொத்த செலவினைக் குறைத்துக் கொள்வதற்கு தனியார் துறையுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தினால் நாட்டின் தேவைக்குப் போதுமான அளவில் விதையை விநியோகிப்பதற்கு பயிர்ப் போகங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படும் விதை உற்பத்தி வேலைத் திட்டம் சரியான மற்றும் நடப்புத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். அந்த விதை உற்பத்தி வேலைத்திட்டம் நம்பகமான தகவல்களுடன் ஒப்பிட்டு வேறுபாட்டினைக் குறைப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(இ) இலங்கையில் காய்கறி பயிற்செய்கைக்கு உள்நாட்டு விதைகளை பெருமளவில் பயன்படுத்துவதற்கு உள்நாட்டு விதை தொடர்பில் ஆராய்ச்சி மேற்கொள்ளல், விவசாயிகளின் விதைத் தேவைப்பாடு தொடர்பில் தகவல் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்றைத் தயாரித்தல், இறக்குமதி விதையுடன் போட்டியிடக் கூடிய உள்நாட்டுக் காய்கறி விதைகளை அறிமுகப்படுத்துவதற்கு உரிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அந்த ஆராய்ச்சிகளின் பலன் அறிமுகப்படுத்தப்பட்ட விதை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கிடையே சிறந்த தொடர்பினை ஏற்படுத்தல்.

(ஈ) பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் சிக்கல்கள் ஏற்படக்கூடிய விதை வர்க்கத்தினைக் கண்டறிந்து அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தீர்மானமான வழிவகையொன்றைத் தயாரித்து செயற்படுத்துதல் மற்றும் நுகர்வோர் கேள்வி காணப்படும் கரட் போன்ற காய்கறிகளுக்கான வர்க்கத்தினை முன்னேற்றி விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்.

(உ) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தினால் நாட்டின் தேவைப்பாட்டின் அடிப்படையில் குறைந்தளவு பாதுகாப்பு விதைத் தொகையினைப் பேணுவதற்கு விதை இருப்பு மட்டத்தினைத் தீர்மானித்து பேணுதல்.

(ஊ) விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்திற்குரிய 27 விதை உற்பத்திப் பண்ணைகளில் காணப்படும் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பினை அபிவிருத்தி செய்து விதை உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பண்ணைகளில் காணப்படும் நீர் சிக்கலைத் தீர்ப்பதற்குத் தேவையான வழிமுறைகளைத் தயாரித்தல்.

(எ) விதை மற்றும் நடுகைப்பொருள் களஞ்சியப்படுத்த இருக்கின்ற களஞ்சியசாலைகளின் குணத்தினைத் தேவையான தரத்திற்கேற்ப அபிவிருத்தி செய்தல் மற்றும் கொள்திறனை அதிகரிப்பதற்கு வழிவகை செய்தல், தேவையான குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகளை முன்னேற்றுதல்.

(ஏ) விதை பண்ணைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான பயிற்சியினை நீண்டகால நோக்கில் நடாத்துதல், நீர் சிக்கல்களை தீர்ப்பதற்கு வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

(ஐ) விதைப் பண்ணைகளில் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இருக்கின்ற வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் நவீனமயமாக்கல்.

(ஒ) விதை விற்பனை செய்வதற்கு விதை மற்றும் நடுகைப்பொருள் மத்திய நிலையத்தின் விற்பனை நிலையங்களுக்கு மேலதிகமாக கமநல சேவைகள் மத்திய நிலையம் உள்ளிட்ட அரச நிறுவனங்களை இணைத்துக் கொள்வதற்கு விரிவான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

(ஓ) ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டதின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மிகுந்த அவதானத்துடன் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்தல். (பாதுகாப்பு இல்லத்தினுள் விதை உற்பத்தியை உக்குவித்தல்)

(க) விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு நிலையத்தின் மூலம் விதைகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விதைச் சான்றிதழ் செயற்பாட்டினை நடாத்திச் செல்வதற்குத் தேவையான பௌதிக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

ஒப்பம்./டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர்

2021 பெப்ரவரி ...21.... ஆம் திகதி.

**பின்னிணைப்பு 01**

**பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய காய்கறி வர்க்கங்கள்**

| காய்கறி வகை | வர்க்கம் | அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு | ஹெக்டெயருக்கான விளைச்சல் (டொன்) |
|---|---|---|---|
| தக்காளி | Hordi Tomato- hybrid 03 | 2019 | 53 |
| போஞ்சி | PB 161 (Keklu) | 2017 | 23-25 |
| | Gannoruwa bill | 2013 | 30 |
| | Hordi Green | 2012 | 28 |
| | Bandarawela Green | 2012 | 18-20 |
| | | | |
| பூசணிக்காய் | Padma | 2016 | 15-20 |
| கறிமிளகாய் | F1 Prarthana | 2015 | 20-25 |
| பாகற்காய் (நிரோக) | F1 Hybrid | 2015 | 15-20 |
| பயற்றங்காய் | A(9)-Gannoruwa | 2015 | 21-24 |
| | Gannoruwa -Hawari | 2012 | 35 |
| வெள்ளரிக்காய் | HORDI Green<br>HORDI White | 2012<br>2013 | 40-45 |
| கீரை | HORDI Tampala | 2013 | 25 |
| பீர்க்கங்காய் | Gannoruwa Ari | 2013 | 30 |
| கத்தரிக்காய் | Hordi Lenairi | 2011 | 35-40 |
| வெண்டிக்காய் | OKH-1-F | 2011 | 30 |
| கரட் | Lanka Carrot | 2011 | 30-35 |

## ஒப்பந்த விதை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஆரோக்கிய நிலைமையில் தோல்வியுற்றதால் நிராகரிக்கப்பட்ட விதை தொடர்பான விபரங்கள்

**2019 ஆம் ஆண்டு**

| **பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்** | **நிராகரிக்கப்பட்ட விதை வகை** | **நிராகரிக்கப்பட்ட விதை தொகை (கிலோகிராம்)** |
|---|---|---|
| குண்டசாலை | தக்காளி | 8 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 3 |
| குண்டசாலை | தக்காளி | 3 |
| குண்டசாலை | தக்காளி | 1.8 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 10.1 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 2.7 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 14.3 |

**2018 ஆம் ஆண்டு**

| **பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்** | **நிராகரிக்கப்பட்ட விதை வகை** | **நிராகரிக்கப்பட்ட விதை தொகை (கிலோகிராம்)** |
|---|---|---|
| குண்டசாலை | தக்காளி | 5 |
| குண்டசாலை | தக்காளி | 6 |
| குண்டசாலை | தக்காளி | 5 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 5 |
| குண்டசாலை | தக்காளி | 2 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 3 |
| குண்டசாலை | தக்காளி | 5 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 2 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 8 |
| குண்டசாலை | தக்காளி | 7 |
| குண்டசாலை | தக்காளி | 3 |
| வி.க.நி. பிரிவு ரிக்கில்லகஸ்கட | தக்காளி | 2 |
| குண்டசாலை | தக்காளி | 3 |
| குண்டசாலை | தக்காளி | 9 |
| குண்டசாலை | தக்காளி | 7 |

**ஆதாரம் - விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை – கன்னொருவ**

**காய்கறி விதை உற்பத்தி தொடர்பான விபரங்கள் - குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணை (2016 சிறுபோகம் தொடக்கம் 2018/2019 பெரும்போகம் வரை)**

| காய்கறி வகை | வர்க்கம் | விதை உற்பத்தி செய்யப்பட்ட பயிர்ச்செய்கை போகங்களின் எண்ணிக்கை | எதிர்பார்க்கப்பட்ட முழு விதைத் தொகை (கிலோகிராம்) | உற்பத்தி செய்யப்பட்ட விதைத் தொகை (கிலோகிராம்) | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| <u>கலப்பின விதை</u> | | | | | |
| கத்தரி | கோடி லேனஇரி | 2016/2017 - 2018/2019 பயிற்செய்கைப் போகம் | 75 | 10 | 13 |
| தக்காளி | பாதிய/மகேஷி/ரவி | 2016 சிறுபோகம் - 2018 சிறுபோகம் 5 பயிற்செய்கைப் போகம் | 36 | 13.7 | 38 |
| பாகல் | ஹோடி/MI5/நிரோகா | 2016 சிறுபோகம் - 2017 சிறுபோகம் 3 பயிற்செய்கைப் போகம் | 60 | 13.2 | 22 |
| வெள்ளரி | கன்னோருவ கிறீன் | 2016/2017 பெரும்போகம் | 24 | - | 0 |
| **<u>அடிப்படை விதை</u>** | | | | | |
| போஞ்சி | TC/கெகுளு | 2016/2017 பெரும்போகம் - 2018/2019 பெரும்போகம் 3 பயிற்செய்கைப் போகம் | 780 | 39 | 5 |
| பாகல் | மாத்தளை கிறீன் | 2017 சிறுபோகம் - 2018/2019 பெரும்போகம் 3 பயிற்செய்கைப் போகம் | 660 | 549 | 83 |
| புஷிடாவோ | BS-1 | 2017 சிறுபோகம் | 300 | - | 0 |
| வெள்ளரி | கன்னோருவ கிறீன் | 2017 சிறுபோகம் | 24 | 0.9 | 4 |
| தக்காளி | திலின/லங்காசெரி/ரஜித | 2017 சிறுபோகம் - 2018 சிறு போகம் 5 பயிற்செய்கைப் போகம் | 79 | 73.6 | 93 |
| கத்தரி | பாதாகொடை | 2016/2017 பெரும்போகம் - 2018 சிறுபோகம் 3 பயிற்செய்கைப் போகம் | 135 | - | 0 |
| புடலங்காய் | TA-2 | 2016 சிறுபோகம் - 2018 சிறு போகம் 5 பயிற்செய்கைப் போகம் | 555 | 253 | 45 |
| **<u>சான்றுபடுத்தப்பட்ட விதை</u>** | | | | | |
| போஞ்சி | TC/பண்டாரவளை நீலம்/WET | 2016/2017 பெரும்போகம் - 2018/2019 பெரும்போகம் 2 பயிற்செய்கைப் போகம் | 440 | - | 0 |
| பாகல் | MC-43/மாத்தளை கிறீன் | 2016/2017 பெரும்போகம் - 2018 சிறுபோகம் 4 பயிற்செய்கைப் | 1120 | 584 | 52 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | போகம் | | | |
| வெள்ளரி | LY58 | 2016/2017 பெரும்போகம் - 2018/2019 பெரும்போகம் 3 பயிற்செய்கைப் போகம் | 360 | - | 0 |
| பீர்க்கங்காய் | கன்னோருவ ஆரி | 2016 சிறுபோகம் - 2016/2017 பெரும்போகம் 2 பயிற்செய்கைப் போகம் | 480 | 83.8 | 17 |
| வெண்டி | MI5 | 2017/2018 பெரும்போகம் | 600 | 119.8 | 20 |
| தக்காளி | ரஜித/ரஷ்மி/திலின | 2016 சிறுபோகம் - 2018/2019 பெரும்போகம் 6 பயிற்செய்கைப் போகம் | 600 | 491.7 | 82 |
| கத்தரி | SM164/பாதாகொட | 2016 சிறுபோகம் - 2018/2019 பெரும்போகம் 3 பயிற்செய்கைப் போகம் | 450 | 203.7 | 45 |
| புடலங்காய் | TA2 | 2017 சிறுபோகம் - 2018/2019 பெரும்போகம் 4 பயிற்செய்கைப் போகம் | 1200 | 403.4 | 34 |

**ஒப்பந்த விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை தொகை மற்றும் பெருக்கிய பின்னர் மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விதை தொடர்பான விபரம்**

| பயிர் | வர்க்கம் | விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட விதைத் தொகை | விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விதை தொகை | பெறுமதி | விதை பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| புடலங்காய் | TA – 2 | 04 | 2400 | - | - | சான்றுபடுத்தப்பட்ட |
| | TA – 2 | 01 | 600 | - | - | அடிப்படை |
| தக்காளி | லுங்கா<br>பவர்<br>ஷேம் | 07 | 175 | - | - | சான்றுபடுத்தப்பட்ட |
| | ரஷ்மி | 09 | 315 | - | - | சான்றுபடுத்தப்பட்ட |
| கறிமிளகாய் | CA 8 | 05 | 500 | - | - | சான்றுபடுத்தப்பட்ட |
| சிறகவரை | SLS 44 | 04 | 3.6 | - | - | அடிப்படை |

**2017/2018 பெரும் போகத்தில் ஒப்பந்த காய்கறி விதை உற்பத்தி**

| பயிர் | வர்க்கம் | விதை பிரிவு | விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை | மீளவும் விதை வழங்கிய விவசாயிகள் எண்ணிக்கை | விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை தொகை (கி.கிராம்) | மீளவும் விவசாயிகள் வழங்கிய விதை தொகை (கி.கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| பாகல் | மாத்தளை | அடிப்படை | 13 | 05 | 11.8 | 141.86 |
| | பச்சை | அடிப்படை | | - | | - |
| சிறகவரை | SLS 44 | அடிப்படை | 02 | - | 3.2 | - |
| புடலங்காய் | TA 2 | அடிப்படை | 01 | - | 1.6 | - |
| கறிமிளகாய் | CA 8 | அடிப்படை | 02 | - | - | - |
| போஞ்சி | சஞ்சய | அடிப்படை | 03 | - | 15 | - |

**2018 சிறுபோகத்தில் ஒப்பந்த காய்கறி விதை வேலைத்திட்டம்**

| **பயிர்** | **வர்க்கம்** | **விதை பிரிவு** | **விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை** | **மீளவும் விதை வழங்கிய விவசாயிகள் எண்ணிக்கை** | **மீள வழங்கப் பட்ட விதை தொகை (கிராம்)** | **பெறுமதி ரூபா.** |
|---|---|---|---|---|---|---|
| கறிமிளகாய் | CA 8 | அடிப்படை | 07 | - | - | - |
| புடலங்காய் | TA 2 | அடிப்படை | 06 | 01 | 10,200g | 25,500 |
| பயற்றங்காய் | A9 | அடிப்படை | 05 | 03 | 21,600g | 89,960 |
| தக்காளி | திலின | அடிப்படை | 11 | 01 | 1,100g | 14,850 |
| | ரஷ்மி | அடிப்படை | 11 | - | - | - |
| | லங்காபவர் | அடிப்படை | 11 | - | - | - |
| | கறிமிளகாய் | அடிப்படை | 02 | - | - | - |

**2018/2019 பெரும் போகம்**

| **பயிர்** | **வர்க்கம்** | **விதை பிரிவு** | **விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை** | **மீள வழங்கப்பட்ட விதை தொகை (கிராம்)** | **மீளவும் விதை வழங்கிய விவசாயிகள் எண்ணிக்கை** | **மீள வழங்கப்பட்ட விதை தொகை (கிராம்)** | **பெறுமதி ரூபா** |
|---|---|---|---|---|---|---|---|
| தக்காளி | லங்கா பவர் | அடிப் படை | 01 | 30g | - | - | - |
| கறி மிளகாய் | CA 8 | அடிப் படை | 02 | 50g | - | - | - |
| வெண்டி | MI7 | அடிப் படை | 01 | 450g | - | - | - |
| பீர்க்கங்காய் | LA33 | அடிப் படை | 09 | 2700g | 06 | 123500g | - |
| பயற்றங்காய் | A9 | அடிப் படை | 01 | 1500g | - | - | - |

**2018/2019 பெரும்போகம் (இரண்டாவது கட்டம்)**

| பயிர் | வர்க்கம் | விதை பிரிவு | விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை | மீள வழங்கப்பட்ட விதை தொகை | மீளவும் விதை வழங்கிய விவசாயிகள் எண்ணிக்கை | மீள வழங்கப்பட்ட விதை தொகை | பெறுமதி ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|
| கறி மிளகாய் | CA 8 | அடிப்படை | 01 | 20g | 01 | 7300g | 56,940 |
| கறி மிளகாய் | ML7 | அடிப்படை | 07 | 3600g | - | - | - |
| பயற்றங் காய் | A9 | அடிப்படை | 01 | 1500g | 01 | 25900g | 67,340 |
| தக்காளி | திலின | அடிப்படை | 35g | - | - | - | - |

**2019 சிறுபோகம்**

| பயிர் | வர்க்கம் | விதை பிரிவு | விதை வழங்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை | மீள வழங்கப்பட் ட விதை தொகை (கிராம்) | மீளவும் விதை வழங்கிய விவசாயிகள் எண்ணிக்கை | மீள வழங்கப்பட்ட விதை தொகை (கிராம்) | பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| பீர்க்கங்காய் | LA33 | அடிப்படை | 02 | 1200g | - | - | - |
| சிறகவரை | SLS 44 | அடிப்படை | 03 | 4200g | - | - | - |
| பீர்க்கங்காய் | A9 | அடிப்படை | 02 | 3000g | - | - | - |
| தக்காளி | லங்கா பவர் | அடிப்படை | 03 | 90g | 02 | 6700g | 86,930 |

**ஆதாரம் - பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், குண்டசாலை**

## பின்னிணைப்பு 05

கன்னோருவ காய்கறி விதை மத்திய நிலையத்தின் விதை விற்பனை நிலையங்கள் ஊடாக 2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் விதை விற்பனையில் பெறப்பட்ட வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாதம் | 2017 | | | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதி வருமானம் | வழங்கல் கட்டளை மூலமான வருமானம் | மொத்தம் | நிதி வருமானம் | வழங்கல் கட்டளை மூலமான வருமானம் | மொத்தம் | நிதி வருமானம் | வழங்கல் கட்டளை மூலமான வருமானம் | மொத்தம் |
| ஜனவரி | 4,280,129 | 2,634,267 | 6,914,396 | 2,257,135 | 3,140,561 | 5,397,696 | 3,215,694 | 2,712,975 | 5,928,669 |
| பெப்ரவரி | 3,344,679 | 1,711,273 | 5,055,952 | 832,186 | 2,028,543 | 2,860,729 | 2,191,301 | 2,128,526 | 4,319,827 |
| மார்ச் | 1,364,321 | 4,044,982 | 5,409,303 | 1,745,893 | 5,984,042 | 7,729,935 | 2,460,178 | 2,984,288 | 5,444,467 |
| ஏப்பிரல் | 973,277 | 1,455,709 | 2,428,986 | 1,075,906 | 2,374,293 | 3,450,199 | 1,746,435 | 2,743,094 | 4,489,529 |
| மே | 879,114 | 2,660,996 | 3,540,110 | 1,307,500 | 2,026,240 | 3,333,740 | 1,526,182 | 3,570,384 | 5,095,566 |
| ஜூன் | 1,030,691 | 2,081,941 | 3,112,632 | 2,167,254 | 2,199,098 | 4,366,352 | 3,070,132 | 2,537,545 | 5,607,677 |
| ஜூலை | 1,349,507 | 2,055,637 | 3,405,144 | 931,920 | 1,819,505 | 2,751,426 | 1,538,978 | 3,146,421 | 4,685,399 |
| ஓகஸ்ட் | 2,794,806 | 3,071,118 | 5,865,924 | 2,000,367 | 3,728,045 | 5,728,412 | 1,489,796 | 4,511,883 | 6,001,679 |
| செப்டெம்பர் | 1,936,928 | 15,219,852 | 17,156,780 | 1,511,088 | 3,725,733 | 5,236,821 | 1,195,975 | 4,276,539 | 5,472,514 |
| ஒக்டோபர் | 3,741,141 | 10,587,824 | 14,328,965 | 4,856,331 | 6,459,992 | 11,316,323 | 2,672,438 | 3,455,170 | 6,127,608 |
| நவம்பர் | 1,837,368 | 4,389,878 | 6,227,246 | 3,671,632 | 4,588,978 | 8,260,611 | 1,413,724 | 4,209,580 | 5,623,304 |
| திசெம்பர் | 2,721,872 | 3,110,913 | 5,832,785 | 8,740,434 | 7,508,316 | 16,248,750 | 1,531,916 | - | 1,531,916 |
| **மொத்தம்** | **26,253,833** | **53,024,390** | **79,278,223** | **31,097,646** | **45,583,346** | **76,680,994** | **24,052,752** | **36,276,405** | **60,329,155** |